Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37 கதிர் : 116 | செவ்வாய்க்கிழமை 22 மார்ச் 2022 | பங்குனி 08 ஆம் நாள் வள்ளுவர் ஆண்டு 2053 | பக்கங்கள்: 16 | விலை: 30/=

பக்கம்- 15 இல்

மருதடியானுக்கு **இன்று** கொடியேற்றம்

போதை மாத்திரை; சந்தேகநபர் **கைது**

ரூபாவின் பெறுமதி **சரிவு**

விகாரை உண்டியலையும் விட்டு வைக்காத திருடர்கள்

# சர்வகட்சி மாநாடு நாளை பிசுபிசுக்கும்

ஆளும் தரப்பின் பங்காளிக் கட்சிகள் உட்பட 16 கட்சிகள் புறக்கணிப்பு

பிரதான எதிரணிக் கட்சிகள் புறக்கணிப்பு

தமிழரசுக் கட்சி, புளொட் பங்கேற்பு

**கொழும்பு, மார்ச் 22**

**ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையில் நாளை நடைபெறவுள்ள சர்வகட்சி மாநாட்டை புறக்கணிப்பதற்கு பிரதான எதிர்க்கட்சி உட்பட 16 அரசியல் கட்சிகள் தீர்மானித்துள்ளன. இதில் அரச பங்காளிக்கட்சியான இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் மாநாட்டைப் புறக்கணிக்க எடுத்துள்ள முடிவானது அரசுக்கு அதிர்ச்சி வைத்தியமாக அமைந்துள்ளது.**

15

## மின்கட்டணம் 500% உயரும்

இராஜாங்க அமைச்சர் அதிர்ச்சித் தகவல்

கொழும்பு, மார்ச் 22
தற்போதுள்ள மின்கட்டணத்தைவிட 500 சதவீதத்தால் மின்கட்டணத்தை உயர்த்தும்யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது என்று இராஜாங்க

04

## எரிசக்தி அமைச்சரின் சாரதி கொலை

கொழும்பு, மார்ச் 22
எரிசக்தி அமைச்சர் காமினி லொக்குகேயின் சாரதி நேற்று மாலை கெஸ்பேவவிலுள்ள அவரது இல்லத்தில் வைத்து இனந்தெரியாத சிலரால் தாக்கப்பட்டு, படுகொலை செய்யப்பட்டுள்ளார். கொலைக்கான

04

## எரிபொருள் வரிசை; நேற்றும் ஒருவர் பலி!

இன்னொருவர் குத்திக் கொலை

கொழும்பு, மார்ச் 22
மீரிகம நகரில் எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு அருகில் வரிசையில் நின்றுகொண்டிருந்த ஒருவர் மயங்கி வீழ்ந்து உயிரிழந்துள்ளார். 76 வயதான ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளாரென பொலிஸார்

04



முச்சந்தி முரளி

**"அப்ப இனிமேல் எம்.பிமார் எல்லாம் தலையில முக்காடு போட்டுக்கொண்டு ஒளிச்சுத் திரியப் போயினம் போல"**

## மக்களின் தாக்குதல் ஆரம்பம்; தலைதெறிக்க ஓடும் எம்.பி.க்கள்

இராஜாங்க அமைச்சரின் வாகனத்தின் மீது எரிவாயு சிலிண்டரால் நேற்றுத் தாக்குதல்

கொழும்பு, மார்ச் 22
இராஜாங்க அமைச்சரும், கேகாலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கனக ஹேரத்துக்கு, சமையல் எரிவாயுக்காக வரிசை

15

## பொருளாதார ஆலோசனைக்குழு முதல் தடவையாக நேற்றுக் கூடியது

உப்புச்சப்பில்லாத பரிந்துரைகள்

கொழும்பு, மார்ச் 22
தேசிய பொருளாதார சபைக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்காக நியமிக்கப்பட்ட ஆலோசனைக்குழு விரைவாக செயற்படுத்த வேண்டிய ஐந்து பரிந்துரைகளை முன்வைத்துள்ளது. ஆலோசனைக்

15

## வரிசைகளில் நிற்போரே மன்னியுங்கள் எங்களை!

நீலிக்கண்ணீர் வடிக்கிறார் அமைச்சர்

கொழும்பு, மார்ச் 22
எரிபொருள் மற்றும் எரிவாயு வரிசையில் காத்திருந்து கஷ்டப்படும் மக்களிடமும் உரப்பிரச்சினையால்

15

## 80 ஆயிரம் சிலிண்டர்கள் நேற்று மாத்திரம் சந்தைக்கு

இன்றும் மற்றொரு கப்பல் வருகை

கொழும்பு, மார்ச் 22
80 ஆயிரம் எரிவாயு சிலிண்டர்கள் நேற்றுச் சந்தைக்கு விநியோகிக்கப்பட்டதாக லிட்ரோ நிறுவனம் தெரி

04

## இந்தியக் கடனின் கீழான முதலாவது கப்பல் வந்தது

கொழும்பு, மார்ச் 22
இந்தியாவின் கடன் திட்டத்தின் கீழ் இறக்குமதி செய்யப்படவுள்ள முதலாவது எரிபொருள் தொகுதியுடன் கப்பலொன்று நாட்டை வந்தடைந்துள்ளது. நேற்று

15

## அமெரிக்க உயர்மட்டக் குழு இலங்கைக்கு இன்று வருகை

கொழும்பு, மார்ச் 22
அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் அரசியல் விவகாரங்களுக்கான துணைச் செயலாளர் விக்டோரியா நுலாண்ட், அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் தெற்கு மற்றும் மத்திய ஆசிய

15





யாழ்ப்பாணத்துக்குப் பயணம் மேற்கொண்டுள்ள இலங்கைக்கான நெதர்லாந்து தூதுவர் ரான்ஞ்சா கொன்கிறிப், உதயன் பணிமனைக்கு நேற்று மாலை வருகை தந்தார். உதயன் குழுமத் தலைவரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான ஈ.சரவணபவன் மற்றும் ஆசிரியர் பீடத்தினருடனும் அவர் கலந்துரையாடலில் ஈடுபட்டார். (ஒ-5)

## 8 வயதுச் சிறுமியை துஷ்பிரயோகம் செய்த 14 வயதுச் சிறுவன் கைது

யாழ்ப்பாணம், மார்ச் 22
அச்சுவேலி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட புத்தூர் கலைமதி ஹிந்துசிட்டி பகுதியில் பாடசாலை செல்லும் 8 வயதுச் சிறுமியை பாலியல் துஷ்

15

## 2.5 பில்லியன் டொலர் கடன் சீனாவிடம் கோரியது இலங்கை


கொழும்பு, மார்ச் 22
இந்தியாவிடம் ஒரு பில்லியன் அமெரிக்க டொலர் கடனுதவியைப் பெற்றுள்ள இலங்கை, சீனாவிடம் 2.5 பில்லியன் அமெரிக்க டொலர் கடனை

15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராஜபக்சக்கள் எவராயினும் தமிழர்களால் விரட்டப்படுவர்

*சரத் பொன்சேகா தெரிவிப்பு*



**கொழும்பு, மார்ச் 22**

**பிரதமர் மஹிந்த ராஜபக்சவாலும், ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவாலும் ஒருபோதும் தமிழ் மக்களின் மனதில் இடம்பிடிக்க முடியாது. தமிழ் மக்களின் வாழ்விடங்களுக்கு அவர்கள் சென்றால் அங்குள்ள மக்களால் விரட்டியடிக்கப்படுவர்.**

இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் வருகைதந்த பிரதமர் மஹிந்த ராஜபக்சவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து சில இடங்களில் மக்கள் போராட்டங்களில் ஈடுபட்டனர். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

2010ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின்போதே மஹிந்த ராஜபக்சவை யாழ்ப்பாண மாவட்ட மக்கள் வெறுத்து விட்டனர். அந்தத் தேர்தலில் யாழ்ப்பாணத்தில் மட்டுமல்ல வடக்கிலும் எனக்கே அதிக வாக்குகள் கிடைத்தன. அதற்காக வடக்கு மக்களுக்கு நான் என்றும் நன்றியுடையவனாக இருப்பேன்.

யாழ்ப்பாணம் மாவட்ட மக்களின் மனதை வெல்லவேண்டும் என்பதற்காகவே பிரதமர் மஹிந்த ராஜபக்ச அங்கு சென்றார். எனினும், பிரதமரின் வருகைக்கு எதிர்ப்புத் தெரிவித்து அங்குள்ள மக்கள் வீதிகளில் போராடி அவரை விரட்டியடித்துள்ளனர். யாழ்ப்பாண மாவட்ட மக்களின் மனதையோ அல்லது வடக்கு- கிழக்கு மக்களின் மனதையோ அல்லது ஒட்டுமொத்த தமிழ்மக்களின் மனதையோ பிரதமர் மஹிந்த ராஜபக்சவாலும், ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவாலும் ஒருபோதும் வெல்லவே முடியாது- என்றார். (ம-4-22)

## நவம்பர் மாதம் முதல் டிஜிற்றல் தே.அ.அட்டை

*இந்தியா நிதியுதவி*

கொழும்பு, மார்ச் 22

இந்தியாவின் நிதியுதவியுடன் டிஜிற்றல் தேசிய அடையாள அட்டையை அறிமுகப்படுத்துவதற்கான ஒப்பந்தம், அமைச்சரவையின் ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இதுதொடர்பில் தொழில்நுட்ப அமைச்சின் செயலாளரான ஜயந்த டி சில்வா தெரிவிக்கையில்,

டிஜிற்றல் மயமாக்கல் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக இலங்கைக்கு 8 மில்லியன் அமெரிக்க டொலரை வழங்குவதற்கு இந்திய அரசு உறுதியளித்துள்ளது. இதற்கான உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கான அமைச்சரவை அங்கீகாரம் அண்மையில் வழங்கப்பட்டது. பயோமெட்ரிக் தகவல் மூலம் குடிமக்களை அடையாளம் காண்பதை எளிதாக்குவதே இந்தத் திட்டத்தின் நோக்கம். இந்த வருடம் நவம்பர் மாதம் முதல், டிஜிற்றல் தேசிய அடையாள அட்டையை அறிமுகப்படுத்த எதிர்பார்த்துள்ளோம். இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் வருகையின்போது இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும்-என்றார். (ம-4-இ)

## பாற்சோறு உண்டு மகிழ்ந்த மக்கள் தற்போது வீதியில்!

*முருத்தெட்டுவே தேரர் எச்சரிக்கை*

கொழும்பு, மார்ச் 22

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கத்தை தோற்றுவித்துப் பாற்சோறு உண்டு மகிழ்ந்த மக்கள் இன்று வீதிக்குத் தள்ளப்பட்டுள்ளனர் என்று அபயராம விகாரையின் விகாராதிபதி முருத்தெட்டுவே ஆனந்த தேரர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையிலான அரசாங்கத்துக்கு ஒத்துழைப்பு வழங்கியவர்கள் என்ற ரீதியில் எதிர்வரும் 31ஆம் திகதி மகாசங்கத்தினரை ஒன்றிணைத்து எவரும் எதிர்பாராத தீர்மானத்தை அறிவிப்போம் என்றும் அவர் தெரிவித்தார். (எ-இ)



## அன்னைபூபதிக்கு நினைவேந்தல்

இந்தியப் படைகளின் தமிழினப் படுகொலைகளுக்கெதிராக உணவுதவிர்ப்பை மேற்கொண்டு உயிரைத் தியாகம் செய்த, அன்னை பூபதியின் 34 ஆவது வருட நினைவேந்தல் மட்டக்களப்பில் அமைந்துள்ள அவரது நினைவிடத்தில் நடைபெற்றது. நிகழ்வில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் தருமலிங்கம் சுரேஸ் மற்றும் கட்சியின் செயற்பாட்டாளர்கள் கலந்து கொண்டனர். (ம-4-இ)

## மசகு எண்ணெய் விலை மீள உயர்வு

கொழும்பு, மார்ச் 22

உலகச் சந்தையில் மசகு எண்ணெயின் விலை மீண்டும் அதிகரித்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

அமெரிக்கா மட்டுமின்றி ஐரோப்பிய நாடுகளும் ரஷ்யாவின் எரிபொருள் மீது தடைவிதிக்க முடிவு செய்யலாம் என்ற தகவலால் மசகு எண்ணெய் விலை நேற்று சுமார் 3 டொலரால் உயர்ந்துள்ளது.

பிரெண்ட் மசகு எண்ணெய் பீப்பாய்க்கு 3.44 டொலர் அதிகரித்து 111.37 டொலராக இருந்தது. இது கடந்த வெள்ளிக்கிழமையை விட 1.2 வீதம் அதிகமாகும். இதற்கிடையில், அமெரிக்காவின் வெஸ்ட் டெக்சாஸ் இன்டர்மீடியட் மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை இன்று 3.54 டொலர் அதிகரித்து 108.24 டொலராக உள்ளது.

இதற்கிடையில், வாரஇறுதியில் சவூதி அரேபியாவில் உள்ள மசகு எண்ணெய்த் தளத்தின் மீது ஏமன் ஹவுதி கிளர்ச்சியாளர்கள் நடத்திய தாக்குதலால் உலக சந்தைகளுக்கான மசகு எண்ணெய் விநியோகம் குறைந்துள்ளது என்று கூறப்படுகின்றது. இதுவும் விலை உயர்வுக்குக் காரணம் என்று சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன. (எ-இ)

## பஸ் – ஓட்டோ விபத்து இருவருக்குக் காயம்!


கிளிநொச்சி, மார்ச் 22

பயணிகளுடன் பயணித்த அரச பேருந்து, அதே திசையில் பயணித்த முச்சக்கர வண்டியை மோதித் தள்ளியது.

இந்த விபத்து கிளிநொச்சி நகரின் ஏ-9 வீதியில் நேற்று மதியம் இடம்பெற்றது.

யாழ்ப்பாணத்திலிருந்து கண்டி நோக்கிப் பயணித்த பேருந்து, தரிப்பிடத்தில் தரிக்க முற்பட்டபோது விபத்து இடம்பெற்றுள்ளது. சம்பவத்தில் முச்சக்கரவண்டி பலமாக சேதமடைந்தது. அதில் பயணித்த இருவர் சிறுகாயமடைந்தனர்.

பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-4-113)



## பொருள்களின் விலை இன்னமும் அதிகரிக்கும்!

*மத்திய வங்கி ஆளுநர் தெரிவிப்பு*

கொழும்பு, மார்ச் 22

உலகத்தின் நிலைமைகளை நாம் கட்டுப்படுத்த முடியாது. நிலக்கரியின் விலையைக் கட்டுப்படுத்தமுடியாது. எரிபொருள்களின் விலையைக் கட்டுப்படுத்த முடியாது. உலகில் இருக்கின்ற பொருள்களின் விலையையும் நாம் கட்டுப்படுத்தமுடியாது.

இவ்வாறு மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது: பொருள்களின் விலை மேலும் அதிகரிக்கும் நிலைமை உள்ளது. இது நெருக்கடிமிக்க ஒரு காலமாக இருக்கின்றது. முழு உலகமும் இந்த நிலைமையை எதிர்கொண்டுள்ளது.

சகலரும் தமது கடமையை சரியான முறையில் முன்னெடுப்பது முக்கியமானது. ஏற்றுமதியாளர்கள் தாம் பெற்றுக்கொள்கின்ற டொலரை உடனடியாக இலங்கை ரூபாவுக்கு மாற்றிக்கொள்வது அவசியமாகும்.

இறக்குமதியாளர்கள் அதிகளவில் பொருள்களை இறக்குமதி செய்யாமல் தேவையான அளவை இறக்குமதி செய்வது நன்றாக இருக்கும்.

அனைவரும் ஒன்றிணைந்து இந்த நெருக்கடியிலிருந்து மீண்டுவர வேண்டும்.

எமது கப்பல் மூழ்கிவிடாமல் பாதுகாக்க வேண்டியது அனைவரதும் கடமையாகும்- என்றார். (எ-இ)

## காச நோயாளர்களின் எண்ணிக்கை உயர்வு

சாவகச்சேரி, மார்ச் 22

தென்மராட்சியில் காசநோயால் பீடிக்கப்படுவோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. கடந்த மூன்று மாதங்களில் நான்கு பேர் காசநோயால் பீடிக்கப்பட்டுள்ளனர். இது தொடர்பாக சுகாதாரப் பிரிவினரிடம் கேட்டபோது, தொடர்ச்சியாக இருமல் காணப்பட்ட போதிலும் உரிய சிகிச்சை பெறாமல் வீடுகளில் தங்கியிருந்தவர்கள், இருமலுடன் இரத்தம் வெளிவந்த பின்னர் சிகிச்சை பெறவந்த போது பரிசோதனையில் நோய் ஏற்பட்டிருந்தமை கண்டு பிடிக்கப்பட்டது. தொடர்ச்சியாக இருமல் காணப்படுபவர்கள் அருகில் உள்ள மருத்துவமனையில் அல்லது யாழ்ப்பாணம் பண்ணையில் உள்ள மார்பு நோய் சிகிச்சைப் பிரிவில் பரிசோதனை மேற்கொள்ள முடியும் என்று தெரிவித்தனர். (எ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரூ.3 ட்ரில்லியன் அச்சிட்டது அரசு

**கொழும்பு, மார்ச் 22**

**இலங்கையின் தற்போதைய அரசாங்கம் மூன்று ட்ரில்லியன் ரூபா பணத்தை அச்சிட்டுள்ளது என்று மத்திய வங்கியின் முன்னாள் பிரதி ஆளுநர் கலாநிதி டபிள்யூ.ஏ.விஜேவர்தன தெரிவித்துள்ளார்.**



2019ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் முதல் இந்த ஆண்டு ஜனவரி மாதம் வரையில், ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையிலான அரசாங்கத்தால் இந்தப் பணம் அச்சிடப்பட்டுள்ளது. சர்வதேச முதலீட்டாளர்களின் நம்பிக்கையை வென்றெடுக்க முடியாத காரணத்தால், வெளிநாட்டுக் கடன்களை பெற்றுக்கொள்ள முடியாத நிலைமை உருவாகியுள்ளது. சர்வதேச நாணய நிதியத்தின் உதவியைக் காலம் தாழ்த்திப் பெற்றுக்கொண்டதால் எவ்வித பயனும் கிடைக்கப் போவதில்லை - என்றார். (ம-4-இ)

## விபத்தில் இளைஞர் படுகாயம்


யாழ்ப்பாணம்,மார்ச் 22

வேகக்கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளா னது. அதில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்தார்.

இந்தவிபத்து சங்கானை சவுடத்து மனோன் மணி அம்மன் ஆலயத்துக்கும், ஏழாம் கட்டைப் பகுதிக்கும் இடையில் நேற்றுமுன்னம் இடம்பெற்றது. விபத்தில் வட்டுக்கோட்டையைச் சேர்ந்த இளைஞர் படுகாயமடைந்தார். அவர் யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ம-4-125)

## பொருள்களின் விலை உச்சம்: கறுப்புச் சந்தையும் தாராளம்

கொழும்பு, மார்ச் 22



நாட்டில் பொருள்களின் விலை சடுதியாக அதிகரித்துவரும் நிலையில், கறுப்புச் சந்தை வியாபாரமும் உருவெடுத்துள்ளது என்று அகில இலங்கை சிற்றுண்டிசாலை உரிமையாளர் சங்கத்தின் தலைவர் அசேல சம்பத் தெரிவித்துள்ளார்.

இறக்குமதி செய்யப்படும் பால் மாவின் விலை அதிகரிப்பதற்கு முன்னரே உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பால்மாவின் விலை 150 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. சமையல் எரிவாயுவை 5 ஆயிரம் ரூபாவுக்கு விற்பனை செய்யும் கறுப்புச் சந்தைகளும் உருவாகியுள்ளன.

பொருள்களின் விலை அதிகரிப்புக்குப் பின்னால் தீவிரமாகச் செயற்பட்டு வரும் கறுப்புச் சந்தை குறித்து, புலனாய்வுப் பிரிவினர் அவதானம் செலுத்துவதில்லை. எனவே பொதுமக்கள் இதுதொடர்பில் மிகுந்த அவதானத்துடன் செயற்படவேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-4-இ)

## பெற்றோல் செற்றில் வாக்குவாதம் இளைஞரொருவர் குத்திக்கொலை!

*முச்சக்கரவண்டிச் சாரதி கைது*

கொழும்பு, மார்ச் 22

எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இளைஞர் ஒருவரை கத்தியால் குத்திப் படுகொலை செய்தார் என்ற குற்றச்சாட்டில், முச்சக்கரவண்டிச் சாரதி ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நிட்டம்புவ ஹொரகொல்ல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட எரிபொருள் நிரப்பு நிலையமொன்றுக்கு அருகில் நேற்றுமுன்தினம் இரவு ஏற்பட்ட மோதலில் இளைஞரொருவர் உயிரிழந்தார்.

எரிபொருள் பெற்றுக்கொள்வதற்காக வருகை தந்திருந்த இளைஞருக்கும், அங்கிருந்த முச்சக்கரவண்டி சாரதியொருவருக்கும் இடையில் ஏற்பட்ட மோதல் காரணமாக, கூரிய ஆயுதமொன்றால் இளைஞர் தாக்கப்பட்டுள்ளார்.

படுகாயமடைந்த இளைஞர், வத்துப்பிட்டிவல மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார்.

இதனையடுத்து முச்சக்கரவண்டிச் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ம-4-இ)

## அந்நியச் செலாவணி நெருக்கடி தூதரங்களை மூடும் இலங்கை

கொழும்பு, மார்ச் 22

அந்நியச் செலாவணி நெருக்கடி காரணமாக, வெளிநாடுகளிலுள்ள இரண்டு இலங்கைத் தூதரகங்கள் மற்றும் ஒரு துணைத் தூதரகத்தை மூட வெளிவிவகார அமைச்சு தீர்மானித்துள்ளது.

ஈராக்கின் பக்தாத் நகரில் உள்ள இலங்கைத் தூதரகம், நோர்வேயின் ஒஸ்லோ நகரில் உள்ள இலங்கைத் தூதரகம் மற்றும் அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரில் உள்ள இலங்கை துணைத் தூதரகம் ஆகியன எதிர்வரும் 31ஆம் திகதி முதல் மூடப்படவுள்ளன.

தூதரகங்கள் மூடப்படவுள்ள நாடுகளின் இராஜதந்திர நடவடிக்கைகள் அருகில் அமைந்துள்ள நாடுகளின் இலங்கைத் தூதரகங்கள் மற்றும் துணைத் தூதரகங்களுக்கு வழங்கப்படவுள்ளன. அதனடிப்படையில் டுபாயில் உள்ள துணைத் தூதரகம் ஈராக் உடனான இராஜதந்திர உறவுகளைக் கையாளும்.

சுவீடனின் ஸ்ரொக்ஹோமில் உள்ள துணைத் தூதரகம் நோர்வேயுடனான இராஜதந்திர உறவுகளைக் கையாளும். அவுஸ்திரேலியாவின் கான்பராவில் உள்ள தூதரகத்திடம், சிட்னியில் உள்ள துணைத் தூதரகத்தின் செயற்பாடுகள் ஒப்படைக்கப்படவுள்ளன. (ம-4-இ)




**ஆர்ப்பாட்டத்துக்குப் பயந்து நல்லூருக்குப் போகாமல், மாவிட்டபுரத்துக்கு ஓடிப்போன மஹிந்தர், அதுக்குப் பிறகுதான் அப்பிடி பின்வாங்கினது மீடியாக்களில வந்தால், அது தன்ர இமேஜை டமேஜ் ஆக்கிப் போடுமெண்டு நினைச்சிருக்கிறார். அதால நல்லூர் விசயத்தை அப்பிடியே 'பிளேட்டை' மாத்தி சனங்களின்ர கவனத்தை வேற பக்கம் திசைதிருப்பச் சொல்லி தன்ர அல்லக்கை, நொள்ளக்கைகளுக்கு ஓர்டர் போட்டிருக்கிறார். இவ்வளவுநாளும் மஹிந்தரின்ர ஆக்கள் எண்டு தங்களைக் காட்டிக் கொள்ளாமல் பம்மிக் கொண்டிருந்த சிலர், இந்த ஓர்டரைக் கேட்டவுடன, தங்களை மறந்து வெட்டைக்கு வந்திட்டினம்.**

**அப்பிடி வந்தவை சும்மா வரேலை. அறிக்கைகளோடதான் வந்தவை.**

**'என்னதான் மஹிந்த போர்க்குற்றவாளியா இருந்தாலும், அவர் கும்பிட வந்தது முருகனை. அப்பிடி சாமி கும்பிட வந்தவரை தடுத்த ஆக்கள், குறிப்பா வேலன் சாமி ஒரு கைக்கூலி' எண்டதுதான் அவையின்ர அறிக்கையின்ர சாராம்சம். ஆனால் களவு செய்தால் சரியாச் செய்யோணும். அது அவைக்குத் தெரியாது போல. ஏனெண்டால் சைவத்துக்காக பொங்கிறம் எண்டிட்டு அவை அனுப்பின நாலைஞ்சு அறிக்கைகளும் ஒரே மாதிரி, ஆரோ சொல்லச் சொல்ல எழுதின மாதிரிக் கிடந்திச்சு. எங்கட அப்பன் குதிருக்க இல்லையெண்ட மாதிரி தாங்கள் ஆருக்காக வேலை செய்யிறம் எண்டதை, அந்த அறிக்கைகளே காட்டிக் குடுத்திட்டுது.**

**ஆனாலும் சில நேர்மையான ஆக்களும் இந்த அறிக்கைக் கும்பலுக்க இருக்கினம். மஹிந்தரை சாமி கும்பிட விடாமல் தடுத்திட்டினம் எண்டு வந்த கண்டன அறிக்கையை அனுப்பின ஒரு குரூப்பின்ர செயலாளர், அண்டைக்கு இரவே அவசரம் அவசரமா எல்லா மீடியாக்காரருக்கும் கோல் எடுத்தார்.**

**'அந்த அமைப்பில செயலாளரா இருக்கிறன். ஆனால் என்ர பேரில அனுப்பப்பட்ட அறிக்கையை நான் அனுப்பேலை, அதைப் போடுறதா இருந்தால் என்ர பேரில போடவேண்டாம்' எண்டு கோரிக்கை வைச்சார். 'மாப்பிள்ளை இவர்தான், ஆனால் அவர் போட்டிருக்கிற சட்டை மட்டும் அவருடையதில்லை' எண்ட கணக்கில இருந்திச்சு அவரின்ர கோரிக்கை. உண்மையில அந்த அமைப்பின்ர தலைவர்தான் அப்பிடி அறிக்கையை எழுதிப்போட்டு, இப்பிடிச் செயலாளரின்ர பேரில அனுப்பி வைச்சவராம். மஹிந்தருக்கு விசுவாசி மாதிரியும் இருக்கோணும், இந்தியாவுக்கு நல்லபிள்ளையா நடிக்கவும் வேணும் எண்ட விலாங்கு மீன் மூளை இருந்தால் தான் இப்பிடியெல்லாம் ஐடியா வரும் போல.**



- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மின்கட்டணம்...

அமைச்சர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:- மின்கட்டணத்தை உயர்த்தும் யோசனையின் கீழ் எதிர் பார்க்காத அளவு மின்சாரக் கட்டணம் அதிகரிக்கக் கூடும். அதனை மக்களால் ஏற்றுக் கொள்ள முடியாது. இன்று அல்லது நாளை மின்கட்டணம் அதிகரிக்கப் படும். 25 முதல் 50 சதவீதத்தால் கட்டணம் அதிகரிக் கப்படுமா? என்பது குறித்து தெரியவில்லை. கிடைக்கப் பெற்றுள்ள தகவல்களுக்கு அமைய, மின்சார சபை முன்வைத்துள்ள யோசனைப்படி, முன்னர் காணப்பட் டதை விடவும் 500 சதவீதத்தால் அதிகரிக்கும். மின்சா ரத்தைப் பயன்படுத்தாது எதிர்வரும் நாள்களில் மின் குமிழ் மற்றும் மின்விசிறி என்பவற்றை வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க வேண்டிய நிலைதான் ஏற்பட் டுள்ளது - என்றார். (அ-ஒ-இ)

## எரிசக்தி...

காரணத்தைக் கண்டறிய கெஸ்பேவ பொலிஸார் விசா ரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-ஒ-இ)

## எரிபொருள்...

கூறினர். குறித்த நபர் மூன்று கொள் கலன்களில் எரிபொருளை வாங்கி, அதனை ஓட்டோவில் ஏற்றிக் கொண்டிருந் தபோதே, திடீரென மயங்கி வீழ்ந்து உயிரி ழந்தார். அவருடன் சேர்த்து 3 பேர் இவ் வாறு இதுவரை உயிரிழந்துள்ளனர்.

இதேவேளை- எரிபொருள் நிரப்பு நிலை யம் ஒன்றில் வரிசையில் நிற்கும்போது ஏற்பட்ட தகராறு காரணமாக இளைஞன் ஒருவன் குத்திக் கொலை செய்யப்பட்டுள் ளான். (அ-ஒ-இ)

**(தொடர்புடைய செய்தி உள்ளே)**

## 80 ஆயிரம்...

வித்துள்ளது.

மேலும், 3 ஆயிரத்து 500 மெற்றிக் தொன் எரிவாயுவை ஏற்றிக்கொண்டு மற்று மொரு கப்பல் இன்று பிற்பகல் இலங்கையை வந்தடையவுள்ளதாக தக வல்கள் தெரிவிக்கின்றன.

(அ-ஒ-இ)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது பாடசாலை ஆசிரியரான
திரு.
**தெய்வேந்திரன் சுகிர்தன்**
அவர்கள் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் 04.03.2022 அன்று நடைபெற்ற 35 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவில் முதுகல்வியியல் மாணி (2ஆம் மேல் வகுப்பு சித்தி) பட்டம் பெற்றமை யிட்டு பாராட்டுக்களையும் வாழ்த்-துக்களையும் தெரிவித்து நிற்கின்றோம்.

**ஆசிரியர் நட்புறவுக்கழகம்**
**யா/ மானிப்பாய் இந்துக்கல்லூரி**
(CS 43720) (3/6)

## வேலைக்கு ஆள் தேவை

**நோயாளர் நலன்புரிச் சங்கம்**
**ஆதார வைத்தியசாலை, தெல்லிப்பளை**

நோயாளர்களைப் பராமரிப்பதற்கு உடல் ஆரோக் கியமுள்ள நற்பழக்க வழக்கமுடைய ஆண் / பெண் தேவை. நேரில் எமது அலுவலகத்துக்கு சமுகந்தரவும்.

லயன் சி. ஹரிகரன்
செயலாளர்
074 120 0115


## கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாண மாவட்டச் செயலக மீள்குடியேற்றக்கிளையில் அலுவலக உதவியாளராக கடமையாற்றும் **திரு. அ. தர்மேஸ்வரன்** அவர்களின் பாசமிகு தாயார்

**அரியரத்தினம் கமலாதேவி**

அவர்கள் கடந்த 18.03.2022 ஆம் திகதி வியாழக்கிழமை அன்று இறைபதம் அடைந்து விட்டார். அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதுடன் அவரது பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**நலன்புரிக்கழகம்,**
**மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.**

## கண்ணீர் அஞ்சலி



எமது சக உத்தியோகத்தர்களான **திரு. ச. சசிகரன்** அவர்களின் தாயாரும் **திருமதி ச. சுதர்சினி** அவர்களின் மாமியாருமான

**அமரர்**
**சந்திரசேகரம் இறஞ்சிதமலர்**

அவர்கள் காலமானதையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்வதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

மாவட்ட முகாமையாளரும், ஊழியர்களும்
தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை,
யாழ்ப்பாணம்.

(CS 43719) (3.6)

## மரண அறிவித்தல்

மண்ணுலகம் 14 . 01 . 1939



விண்ணுலகம் 21 . 03 . 2022

**திருமதி பூமணி மகேந்திரன்**

(ஓய்வுபெற்ற ஆசிரியை, யா/ செங்குந்தா இந்துக்கல்லூரி)

கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும் சங்கானையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பூமணி மகேந்திரன் நேற்று (21.03.2022) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சின்னையா தங்கமுத்து தம்பதியின் அன்பு மருமகளும் மகேந்திரன் அவர்களின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான நவமணி ராஜரட்ணம், இராசமணி தங்கராஜா, மகேஸ்வரி நாகேந்திரா, நேசமணி குமாரசாமி, ஞானமணி பூபாலராஜா, மற்றும் தவமணி நமசிவாயம், ஜெயமணி - ரட்ணகோபால் ஆகியோரின் அன்புச் சகோதரியும் இராதாக்கிருஷ்ணன், மாலினி, சாந்தினி - ரணட்கோபால், இராதமனோகரன் - வசந்தா, ஶ்ரீரஞ்சினி - லோகநாதன், ரேணுகா - திருஞானசம்பந்தர், ராதிகா - கிருஷ்ணராஜா, மகிந்தன் - தேவயானி ஆகியோரின் சின்னம்மாவும் காலஞ்சென்றவர்களான நாகேஸ்வரி, பவளம், ராசமணி, மார்க்கண்டு, சின்னம்மா மற்றும் மகேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனியும் தவமணி, புஸ்பலீலா, இராஜேஸ்வரி, காலஞ்சென்ற லோகேஸ்வரன், ராகினி, மாலினி, வாமதேவன், கௌசலா, ரவீந்திரநாதன், ஜெயந்தி, இராசவேல், காலஞ்சென்றவர்களான இராசமலர், இராசபூபதி, இராசநாயகம் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.03.2022) செவ்வாய்க் கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கரைச்சி இந்து மயானத்திற்கு எடுத்துச்

**பிரதான வீதி, சங்கானை**
**(சிங்கர் கம்பனிக்கு முன்பாக)**
**021 225 1767, 077 303 4114**

தகவல்:
குடும்பத்தினர்
சி.மகேந்திரன் (கணவர்)
கௌசலா கண்ணதாசன் (மருமகள்)

## 1ஆம் ஆண்டு நீங்கா நினைவலைகள்

மண் மகிழ 31 . 10 . 1974



கண் நெகிழ 02 . 04 . 2022

அமரர்
**வேலுப்பிள்ளை அன்பழகன்**

நாம் கண் திறந்த
நாள் முதல்
விரல் பிடித்துக்
கதைகள் கூறி...
உற்ற வயதினில்
'அ' எனும் உயிரெழுத்தை
அன்பாக எமக்கு ஊட்டி ....
விளையும் பயிரை
முளையிலே தெரியுமென
நாம் வளர உரமாகினீர்
பள்ளிப்பருவத்திலே
நாம் கால் பதித்த வேளையில்
கலக்கமின்றி நாம்
வலம்வர
உற்ற துணையாய் இருந்து...
சித்திரமும் செந்தமிழும்
கலையுணர்வும் விளையாட்டும்
எம்மில் மிளரக் கண்டு
அகமகிழ்ந்தீர் ...
வினைத்திறன் மிக்க
உம் கற்பித்தலினால்
விதையாய் இருந்த எம்மை
நற்பயிராக்கிப்
பார்போற்றும் வண்ணம்
எம் கரங்களில்
கல்விச்சுடரை ஏற்றிவிட்டு
எங்கு தான் சென்றீரோ....?
எமது உள்ளத்தில்
உறையும் நல் ஆசானே...!
எத்தனை நாட்கள்
கடந்தாலும்
ஆண்டுகள் பல
ஓடினாலும்
எம் மனதில்
பதிந்த உம் அன்பும்
பண்பும் அரவணைப்பும்
ஒன்று சேர்ந்து
விழிகள் கசிய
தெய்வமாய் வாழ்வீர்...!
என்றும் எம்முடன்

**- பைரவி, சகானா -**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வகட்சி மாநாட்டை ஐ.ம.ச. புறக்கணிக்கும்

## ஜனாதிபதிக்குக் கடிதம் அனுப்பவும் ஏற்பாடு

**கொழும்பு, மார்ச் 22**

**ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையில் நடைபெறவுள்ள சர்வகட்சி மாநாட்டை புறக்கணிப்பதற்குப் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி தீர்மானித்துள்ளது.**

ஐக்கிய மக்கள் சக்தியின் விசேட கூட்டமொன்று கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் கட்சி தலைமையகத்தில் நேற்று நடைபெற்றது. இதன்போதே மேற்படி முடிவு எடுக்கப்பட்டதென ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளரான திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

'ஊடக கண்காட்சிக்காகவே அரசால் சர்வகட்சி மாநாடு நடத்தப்படுகின்றது. பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படவேண்டும் என்ற உண்மையான நோக்கம் இல்லை. எனவே, அப்படியான மாநாட்டில் பங்கேற்பதில் எந்தவித பயனும் இல்லை. இது தொடர்பில் ஜனாதிபதிக்கு விரிவானதொரு கடிதம் அனுப்பிவைக்கப்படும். நாட்டில் தற்போது நிலவும் பிரச்சினைகள் தொடர்பில் ஜனாதிபதியின் நிலைப்பாடு கேட்டறியப்படும் எனவும் திஸ்ஸ அத்தநாயக்க குறிப்பிட்டார்.

அதேவேளை, ஜனாதிபதி தலைமையில் மார்ச் 23ஆம் திகதி நடைபெறும் சர்வகட்சி மாநாட்டில் பங்கேற்கப்போவதில்லை என தேசிய மக்கள் சக்தியும் அறிவிப்பு விடுத்துள்ளது.

விமல் வீரவன்ஸவின் தேசிய சுதந்திர முன்னணி, உதய கம்மன்பிலவின் பிவிதுரு ஹெல உறுமய, வாசுதேவ நாணயக்காரவின் ஜனநாயக இடதுசாரி முன்னணி என்பனவும் மாநாட்டைப் புறக்கணிக்கும் முடிவை எடுத்துள்ளன. (ம-44,22)

## தவக்காலச் சிந்தனை

### மறப்போம் மன்னிப்போம்

ஆண்டவரே என் எதிராளியை நான் எத்தனை முறை மன்னிக்க வேண்டும்? இது சீர் பேதுருவின் கேள்வி. "ஏழு முறை மட்டுமல்ல எழுபது தடவை மன்னியும்" இது இயேசுவின் பதில்.

மன்னிப்பு என்னும் உயரிய பண்பைக் கடைப்பிடிப்போரை இவ்வுலகம் பலவீனமாகப் பார்க்கின்ற போது இயேசு மன்னிப்போரை வலிமை மிக்கவர்களாக தமக்குரிய பிள்ளைகளாகக் காட்ட முற்படுகிறார். ஆகவேதான் மன்னிப்பதற்கு எண்ணிக்கைகளோ காலவரையறைகளோ சூழ்நிலைகளோ கிடையாது என்பதைச் சுட்டிக்காட்டுகின்றார்.

மன்னிக்க மறுத்த பணியாளன் உவமையில் (மத் 18:21-35) அரசரிடம் மன்னிப்புப் பெற்ற பணியாளன், தன் சக ஊழியனை மன்னிக்க மறுத்த பொழுது தலைவனிடமிருந்துதான் பெற்றுக்கொண்ட அளவுகடந்த நிபந்தனையற்ற மன்னிப்பை முழுவதுமாக இழந்து விடுகின்றான்.

இறைவன் எமக்குக் காட்டும் இரக்கம் அவர் எமக்கு வழங்கும் கொடை. இறைவனிடம் மன்னிப்பு அனுபவம் பெற்று மகிழும் நாம் அதைப் பிறருக்கு வழங்காதிருக்கும்போது நாம்பெற்ற இறை இரக்கத்தை அவமதிக்கின்றோம். நாம் பெற்ற மன்னிப்பின் மகிழ்வை மனத்தாங்கல் உள்ளோருடன் பகிர்ந்து கொள்வதே இறை இரக்கத்துக்கு நாம் கொடுக்கும் அங்கீகாரம்.

மறப்போம் மன்னிப்போம்.. உறவை வளர்ப்போம். தவக்காலத்தை அர்த்தமுள்ளதாக்கி விண்ணரசில் நுழைவோம்.

**யே.சுவீட்சன்,**
கொழும்புத்துறை

# ஜனாதிபதி பதவி விலகார்

*ஜனாதிபதியின் பேச்சாளர் தெரிவிப்பு*

கொழும்பு, மார்ச் 22

ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ச பதவி விலகுவது தொடர்பில் சமூக வலைத்தளங்களில் வெளியாகும் செய்திகளை ஜனாதிபதியின் பேச்சாளர் கிங்ஸ்லி ரத்நாயக்க மறுத்துள்ளார்.

ஜனாதிபதி பாரதூரமான நெருக்கடியிலிருந்து தப்பி ஓடியவர் அல்ல. இன்று நாடு எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் ஜனாதிபதி கவனம் செலுத்துகின்றார். நாட்டை மேலும் சீர்குலைக்கும் நோக்கில் சிலர் இவ்வாறான வதந்திகளைப் பரப்புகின்றனர் என்றும் அவர் தெரிவித்தார். (ம-4,இ)



*மண்ணெண்ணெய் பெறவந்த*

# மக்கள் போராட்டத்தால் கொழும்பில் பதற்றநிலை

கொழும்பு, மார்ச் 22

கொழும்பு - ஊறுகொடவத்தை பகுதியில் நேற்று பதற்றமான சூழல் நிலவி வருவதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

மண்ணெண்ணெய் பெற்றுக் கொள்ள வந்த மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டதன் காரணமாக குறித்த இடத்தில் அமைதியின்மை ஏற்பட்டது. தமக்குத் தேவையான எரிபொருள் கிடைக்காததை அடுத்தே மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். (ம)

# ரயில் கட்டணத்தை அதிகரிக்க விடோம்

*தொழிற்சங்கங்கள் பிடிவாதம்*

கொழும்பு, மார்ச் 22

நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடிக்குள், பொதுமக்கள் மீது இன்னும் சுமையை ஏற்படுத்த முடியாது. ஆதலால் ரயில் கட்டணத்தை அதிகரிக்கத் தேவையில்லை என்று தொழிற்சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

ரயில் கட்டணத்தை அதிகரிக்குமாறு ரயில்வே பொது முகாமையாளரால், பல தடவைகள் விடுக்கப்பட்ட கோரிக்கைகளைக் கடுமையாக எதிர்க்கின்றோம். மாற்றுத் தீர்வுகள் மூலம் ரயில்வேக்கு ஏற்பட்டுள்ள இழப்பைக் குறைக்க முடியும் என்றும் ரயில் நிலைய அதிபர்கள் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர். (ம-4.இ)

*கொழும்பு - பதுளை*

# தபால் ரயில்சேவை மீண்டும் ஆரம்பம்!

கொழும்பு, மார்ச் 22

கொழும்பு - பதுளை இரவுநேர தபால் ரயில் 318 நாள்களுக்குப் பின்னர் சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

உறங்கல் இருக்கைப் பெட்டிகள் மற்றும் அஞ்சல் பெட்டியுடன் ரயில் மீண்டும் இயக்கப்படும் என்று இலங்கை ரயில்வே தெரிவித்துள்ளது.

ரயில் நிறுத்தப்பட்டதால், தபால் சேவைகள் மற்றும் பொதிப்போக்குவரத்துச் சேவைகள் பாதிக்கப்பட்டன. பதுளை -கொழும்பு இரவு தபால் ரயில் உறங்கல் இருக்கை பெட்டிகளில் படுக்கை வசதியுடன் மீண்டும் இயக்கப்படுகின்றது. எனினும் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம், தலைமன்னார், மட்டக்களப்பு மற்றும் திருகோணமலைக்கு இரவு நேர தபால் ரயில்களை இயக்குவதற்கு எந்தவித ஏற்பாடுகளும் செய்யப்படவில்லை. (ம-4.இ)

# வரிசையில் நின்றாலும் பெரமுனவை ஆதரிப்பர்

*அரச தரப்பின் நம்பிக்கை*

கொழும்பு, மார்ச் 22

அத்தியாவசிய தேவைகளுக்காக மக்கள் வரிசையில் நின்றாலும், பொதுஜன பெரமுனவுக்கே அதிகாரத்தை வழங்குவர் என்று விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

நாவலப்பிட்டி இளைஞர் முன்னணியின் கூட்டத்தில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

நாடு எதிர்நோக்கும் அனைத்து நெருக்கடிகளுக்கும் ஜனாதிபதி மற்றும் பிரதமரிடம் மாத்திரமே தீர்வு உள்ளது. சஜித் பிரேமதாஸ மற்றும் அநுர திஸாநாயக்க ஆகியோர் வீதியில் இறங்கி எத்தனை போராட்டங்களை நடத்தினாலும் ஜனாதிபதி தலைமையிலான தற்போதைய அரசாங்கம்மீது நாட்டு மக்கள் முழுமையான நம்பிக்கை வைத்துள்ளனர். அதற்கேற்ப பொதுஜன பெரமுனவுக்கு அதிகாரத்தை மீண்டும் வழங்கத் தயாராக இருக்கின்றனர். மக்கள் வரிசையில் நிற்கும் அவல நிலையை அரசாங்கம் உணர்ந்துள்ளது. அனைத்துப் பிரச்சினைகளுக்கும் விரைவில் தீர்வு காணமுடியும் - என்றார். (ம-4,இ)

*கடன்பெறுகை விவகாரம்*

# இலங்கையின் கோரிக்கையை ஆராய்கின்றது சீன அரசு!

கொழும்பு, மார்ச் 22

இலங்கை கோரியுள்ள கடன்கள் தொடர்பில் ஆராயப்பட்டு வருகின்றது என்று சீனா அறிவித்துள்ளது. இந்தியாவிடம் ஒரு பில்லியன் டொலரைக் கடனாகப் பெற்ற இலங்கை, சீனாவிடமும் கடன் கோரியுள்ளது.

ஒரு பில்லியன் டொலரைக் கடனாகவும், 1.5 பில்லியன் டொலரை கடன் பத்திரமாகவும் சீனாவிடம் இருந்து இலங்கை கோரியிருந்தது.

ஏற்கனவே இலங்கை, சீனாவிடம் நாணயப் பரிமாற்றத்துக்காக 1.5 பில்லியன் டொலரை 2021ஆம் ஆண்டு பெற்றமைக்கு மேலதிகமாகவே இந்தக் கடன் கோரப்பட்டுள்ளது. இலங்கையின் இந்தக் கோரிக்கையை [illegible] வருகின்றோம் என்று இலங்கையின் [illegible] தூதுவர் தெரிவித்துள்ளார். (ம-4,இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்களின் உரிமைகள் மீறப்படுவதால் வன்முறைகள் அதிகரிப்பு

## கிளி. மாவட்டச் செயலர் தெரிவிப்பு

**கிளிநொச்சி, மார்ச் 22**

**இன்று பெண்களுக்கு சமூகத்தில் உரிமைகள் சரியாகப் பகிர்ந்தளிக்கப்படாத காரணத்தாலேயே வன்முறைகள் அதிகரித்துள்ளன. ஆனால், இவற்றையெல்லாம் பெண்களே முறியடிக்க வேண்டும் என்று கிளிநொச்சி மாவட்டச் செயலர் றூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.**

கிளிநொச்சி மகா சக்தி மகளிர் சம்மேளனத்தால் நடத்தப்பட்ட சர்வதேச மகளிர் தின நிகழ்வில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

பெண்களும், ஆண்களும் இணைந்துதான் ஒரு சமூகம். அதனை அடிப்படையாகக் கொண்டதே ஒரு குடும்பம். இருபாலாரும் இணைந்து அவரவர்களுக்குரிய பங்களிப்பைச் சரியாக வழங்குகின்றபோது, ஒரு ஆரோக்கியமான குடும்பக்கட்டமைப்பை அமைத்துக்கொள்ளக்கூடியதாக இருக்கும்.

கிளிநொச்சி மாவட்டத்தில் பல்வேறு குடும்பங்களில் பெண்களுக்கெதிரான வன்முறைகள், பல்வேறு விதமாக பாதிக்கப்படுகின்ற சம்பவங்கள் அனுதினமும் இடம்பெறுகின்றன. உண்மையில் பெண்மையைச் சரியான முறையிலே மதிக்காமைதான் இதற்கு அடிப்படைக் காரணம். ஆனால், பெண்கள் பல் வேறு வேதனைகளையும், வலிகளையும் தாண்டி சாதனைப் பெண்களாக மிளிர வேண்டும். பெண்கள் அரசியல் ரீதியாகவும் முன்னுக்குவர வேண்டும். அனைத்து துறைகளிலும் சாதிக்க வேண்டும் - என்றார். (ம-4,113)



நுவரெலியாவில் திருநாவுக்கரசு ஆதீனம் அண்மையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. இந்த நிகழ்வு தென்கையிலை ஆதீனத்தின் குருமுதல்வர் அகத்தியார் அடிகளாரின் தலைமையில் மெய்கண்டார் ஆதீனத்தின் குருமுதல்வர் உமாபதிசிவம் அடிகளார் முன்னிலையில் இடம்பெற்றது. (வ-125)

# காணி விசேட மத்தியஸ்த சபை மாவட்டச் செயலகத்தில் இயங்கும்

## மாவட்டச் செயலர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 22

யாழ். மாவட்ட காணி விசேட மத்தியஸ்த சபை மாவட்டச் செயலகத்தில் இயங்கும் என்று மாவட்டச் செயலர் கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்துள்ளார்.

குறித்த சபை இயங்குவதற்கு பொருத்தமான இடம் வழங்கப்படவில்லை என்று காணி விசேட மத்தியஸ்தர்களால் மாவட்டச் செயலரிடம் முறையிடப்பட்டது.

இதற்கமையவே சகல வசதிகளுடன் காணி மத்தியஸ்த சபை இயங்குவதற்கு பொருத்தமான இடம் மாவட்டச் செயலக வளாகத்தில் ஒதுக்கிக் கொடுக்கப்பட்டது.

இதுதொடர்பில் மாவட்டச் செயலர் தெரிவித்ததாவது:-

எதிர்வரும் 26ஆம் திகதி வரை கொட்டடி சனசமூக நிலையத்துக்கு வரவழைக்கப்பட்ட பிணக்குகள் மட்டும் அங்கு ஆராயப்படும்.

ஏனைய புதிய பிணக்குகள் மற்றும் ஏற்கனவே நடைமுறையில் இருக்கின்ற தொடர் பிணக்குகள் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 2ஆம் திகதி மாவட்டச் செயலகத்தில் இடம்பெறும்.

மேலும் யாழ். மாவட்ட காணி விசேட மத்தியஸ்தர்களுக்கு கடந்த 5 மாதங்களாக வழங்கப்படாமல் இருக்கும் நிலுவைக் கொடுப்பனவுகள் விரைவில் வழங்கப்படும் - என்றார். (ம-14,50)

# எலும்பு அளவு குறைந்ததால் புலம்புகின்றது விமல் அணி!

கொழும்பு, மார்ச் 22



அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் விமல் வீரவன்ஸ உள்ளிட்ட தலைவர்களின் 11 கூட்டணிக் கட்சிகள் அடங்கிய அணி அரசாங்கத்துக்கு எந்தவித அழுத்தங்களையும் கொடுக்க முடியாத அணி என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது:-

இந்த அணியினர் அரசாங்கத்திடம் இருந்து கிடைக்கும் இறைச்சி எலும்பின் அளவு குறைந்ததன் காரணமாக புலம்பும் கூட்டம். இந்த அணியினருக்கு அரசாங்கத்துடன் இருக்கும் மோதல் கொள்கை ரீதியான மோதல் அல்ல.

இந்த அணிக்கும் அரசாங்கத்துக்கும் இடையில் இருந்து வரும் மோதல் கவனத்தில் கொள்ள வேண்டிய ஒன்றல்ல. 11 கட்சிகள் அடங்கிய அணியின் பிரதான பிரமுகரான விமல் வீரவன்ஸ, மக்கள் விடுதலை முன்னணியின் ஊடாக அரசியலுக்கு வந்தவர். எனினும் கடந்த காலம் முழுவதும் அவர் மக்கள் விடுதலை முன்னணியை கடுமையாக விமர்சித்து வந்துள்ளார்- என்றார். (ஏ-இ)

# கல்வி முறையிலும் பெரும் பாகுபாடுகள்

## சஜித் சுட்டிக்காட்டு



கொழும்பு, மார்ச் 22

மாணவர்களுக்கு கல்வியைப் பகிர்ந்தளிப்பதில் பாகுபாடு காட்டவேண்டாம். இதுவே அவர்களிடையே வேற்றுமையை ஏற்படுத்தும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எவர் எதைத் திருடினாலும் அறிவை யாராலும் திருட முடியாது. எனவே கல்வி மிகவும் முக்கியமானது. எனினும் கல்வியிலும் பல்வேறு பிளவுகள் காணப்படுகின்றன. ஒருபுறம், மாகாணப் பாடசாலைகள் மற்றும் தேசிய பாடசாலைகள் என்றும், மறுபுறம் நகர்ப்புற மற்றும் கிராமப்புற பாடசாலைகள் என்றவாறும் பிரிக்கப்பட்டுள்ளது. கல்வியை இவ்வாறு பிரிப்பது பெரும் அநீதி. அந்தத் துர்ப்பாக்கிய நிலையில் இருந்து கல்வியை விடுவிக்கவேண்டும் -என்றார். (ம-4-இ)




# கல்முனையில் 'தடுப்பியல்' குறுந்திரைப்படம் வெளியீடு

கொழும்பு, மார்ச் 22

அம்பாறை, கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை ஊடகப்பிரிவின் தயாரிப்பில் ஒளிப்பதிவு செய்யப்பட்ட 'தடுப்பியல்' குறுந்திரைப்படம், அண்மையில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் கேட்போர்கூடத்தில் வெளியிடப்பட்டது.

குறித்த திரைப்படமானது, கொரோனாத் தொற்று மற்றும் கொரோனாத் தடுப்பு நடவடிக்கைகளின் போது சுகாதாரத்துறையினரின் பங்களிப்புக்களை மையமாக வைத்து தயாரிக்கப்பட்டதாகும்.

பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவ கலாநிதி ஐ.எல்.எம்.றிபாஸ் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், பிராந்திய சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் எம்.பி.ஏ.வாஜித், திட்டமிடல் பிரிவு மருத்துவ அதிகாரி மருத்துவர் எம்.சீ.எம்.மாஹிர், தொற்று நோய் பொறுப்பு மருத்துவ அதிகாரி மருத்துவர் எம்.ஏ.சி.எம்.பஸால், சி.இ.ஆர்.ஐ. நிறுவனத்தின் பணிப்பாளர் வீ.ஐ.தர்ஷன், சுகாதார சேவைகள் பணிமனை உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ம-14)

# நாட்டின் தற்போதைய நிலைமைக்கு சகல ஆட்சியாளர்களுமே பொறுப்பு

## ஒப்புக்கொள்கிறார் மைத்திரி

கொழும்பு, மார்ச் 22

இலங்கையின் தற்போதைய நிலைமைக்கு நாட்டை ஆட்சி செய்த சகலரும் பொறுப்புக்கூற வேண்டும் என்று சுதந்திரக் கட்சியின் தலைவரும் மற்றும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

சுதந்திரக் கட்சி என்ற அடிப்படையில் எரியும் தீயில் மேலும் எண்ணெய் ஊற்ற நாம் தயாரில்லை. எமக்கும் வீதியில் இறங்கி ஆர்ப்பாட்டங்களை மேற்கொள்ள முடியும்.

எனினும், அதனூடாக நாடு மேலும் வீழ்ச்சியடையும். தற்போது எதிர்க்கட்சியினர் என்ன செய்கின்றனர் எனத் தெரியவில்லை. நாளையதினமே ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்ற முடியாது.

சர்வகட்சி மாநாட்டில் நாடாளுமன்றைப் பிரதிநிதித்துவப்படுத் தும் சகல கட்சிகளும் பங்கேற்க வேண்டும் என நாம் பரிந்துரைத்துள்ளோம்.

தற்போது முன்னெடுக்கப்படும் ஆர்ப்பாட்டங்கள் காரணமாக நாடு மேலும் வீழ்ச்சிப் பாதையிலேயே செல்லும் -என்றார். (ம-4,இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## எப்போதுமேயில்லை இப்படியொரு பஞ்சம்!

இலங்கையின் நிலைமை நாளுக்கு நாள் மோசமாகிக் கொண்டே வருகிறது. அத்தியாவசியப் பொருள்களுக்கு நிலவும் தட்டுப்பாடு நாட்டு மக்களை பொறுமையின் எல்லைக்கு அப்பால் இழுத்துச் சென்றிருக்கிறது. அண்மைய நாள்களாக மக்கள் அரசுக்கு எதிரான போராட்டங்களைத் தன்னிச்சையாக ஆரம்பித்திருக்கின்றனர். மக்களின் இந்த மனநிலை மாற்றம் மிக ஆபத்தான ஒன்று.

இலங்கை அரசாங்கம் நாட்டின் பொருளாதார நெருக்கடி நிலைமையை வெளிப்படுத்தாமல், நாட்டு மக்களை மாயையில் வைத்திருக்கவே முயல்கின்றது. எரிபொருள் கப்பல்கள் வருகின்றன, இந்தியக் கடன் கிடைத்து விட்டது, சீனக் கடன் கிடைக்கப்போகின்றது என்று கூறிக்கொண்டிருக்கும் அரசாங்கம், நாட்டில் உள்ள பிரச்சினைகள் இன்னும் சொற்ப நாள்களில் சரியாகிவிடும் என்ற தோற்றத்தை மக்களிடையே ஏற்படுத்த முனைகின்றது.

ஆனால், உண்மையில் தற்போது ஏற்பட்டிருக்கும் பொருளாதார நெருக்கடிபோல எந்தக்காலத்திலும் இலங்கையில் பொருளாதார நெருக்கடி ஏற்படவில்லை என்பதே உண்மை. இலங்கையில் 1970ஆம் ஆண்டுகளில் காணப்பட்ட பஞ்ச நிலைமையைவிடவும், தற்போது நாடு மிகப் பெரிய பொருளாதார நெருக்கடியில் சிக்கியிருக்கின்றது என்பதை பொருளாதார நிபுணர்கள் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். இலங்கைக்கு சுமார் 51 பில்லியன் டொலர் அளவுக்கு வெளிநாட்டுக்கடன் இருக்கலாம் என மதிப்பிடப்படுகிறது. அதில் சுமார் 7 பில்லியன் டொலர் வரை இந்த ஆண்டே செலுத்த வேண்டியிருக்கிறது. ஆனால், இலங்கையின் கையிருப்பில் 2 பில்லியன் டொலருக்குக் குறைவாகவே உள்ளது என்பது அச்சம் தரும் தகவல்.

நாடு இந்த நிலைமையில் இருக்க அரசாங்கம் வெளியிடும் அறிவித்தல்களும், அறிக்கைகளும் நேர் மாறாகவே காணப்படுகின்றன. எரிபொருள் கப்பல்கள் வருகின்றன, எரிவாயுக் கப்பல்கள் வருகின்றன என்று அரசாங்கம் கூறுகின்றபோதும், நாட்டில் எரிபொருள், எரிவாயு என்பவற்றுக்குக் கடும் தட்டுப்பாடு நிலவுகின்றது. இந்த நெருக்கடிகள் மக்களின் செயற்பாடுகளாலேயே ஏற்படுகின்றன என்று தன்மீதான தவறுகளை மறைக்கவே ராஜபக்ச அரசாங்கம் முயல்கின்றது.

எரிபொருளுக்காக வரிசைகளில் காத்திருந்தவர்களில் மூவர் உயிரிழந்திருக்கிறார்கள். அதைப்போன்றே அத்தியாவசியப் பொருள்களின் நிலைமையும். அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் சகட்டுமேனிக்கு உயர்த்தப்படுகின்றன. பல பொருள்களின் விலைகள் வர்த்தகர்களாலேயே தீர்மானிக்கப்படுகின்றன. அவற்றைக் கண்காணிக்க வேண்டிய அரச நிறுவனங்களோ மௌனமாக இருக்கின்றன.

இலங்கையின் இந்த நெருக்கடி நிலைமை இயல்புக்குத் திரும்ப பல ஆண்டுகள் பிடிக்கும் என்பதே உண்மை நிலைவரம். ராஜபக்ச அரசாங்கம் வழக்கம்போன்று உரிய நேரத்தைத் தவறவிட்டு, வெள்ளம் தலைக்கு மேல் சென்றபின்னர் சர்வதேச நாணய நிதியத்தை நாடவிருக்கின்றது. சர்வதேச நாணய நிதியத்தின் உதவிகள் கிடைத்தாலும் அதனால் ஏற்படும் விளைவுகள் இனிப்பாக இருக்காது. பொருளாதாரத்தை மீட்டெடுக்க வரிகளை அதிகரிக்க வேண்டும் என்பதே சர்வதேச நாணய நிதியத்தின் முதல் நிபந்தனையாக இருக்கும் என்பது பொருளாதார வல்லுநர்களின் அனுபவ அறிவு. அதனால் இனிவரும் காலங்களில் பொருள்களின் விலைகள் இன்னமும் அதிகரிக்குமே அன்றிக் குறையப்போவதில்லை.

சாதாரண பொதுமக்கள் தங்கள் நாளாந்த உழைப்பைக் கொண்டு வாழ்க்கையை நகர்த்த முடியாத நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இந்தப்பின்னணியில் பொதுமக்கள் ஆங்காங்கே கிளர்ந்து போராட்டங்களில் ஈடுபட ஆரம்பித்திருக்கின்றனர். அந்தப் போராட்டங்களில் ஒருபகுதியாகவே, எரிவாயுவுக்காக வரிசையில் நின்ற மக்கள் இராஜாங்க அமைச்சர் ஒருவர் மீது நடத்திய சிலிண்டர் தாக்குதலையும் கருதமுடியும். அரசுக்கு எதிராக ஆரம்பிக்கும் இந்தப் போராட்டங்கள் படிப்படியாக நாட்டின் கட்டமைப்புக்களைச் சிதைக்கும் என்பதையும் மறுக்க முடியாது. இத்தனைகாலமும் குறுகிய நோக்கங்களுக்காக, பொருத்தமில்லாதவர்களை ஆட்சியில், அதிகாரத்தில் இருத்தியமைக்கான பயன்களை இலங்கை மக்கள் இனித்தான் அனுபவிக்கப் போகிறார்கள்.

## நாளொரு நல்வார்த்தை

ஒரு மனிதனுக்கு துணிச்சலைப் போல உண்மையான நண்பன் இந்த உலகில் வேறு யாருமில்லை.

- சாணக்கியன்




# வடக்கின் கலாசாரங்கள் மேலும் பலப்படுத்தப்படும்

## ஆளுநர் உறுதி

**யாழ்ப்பாணம், மார்ச் 22**

**வடக்கு மாகாணத்தின் கலாசார விழுமியங்கள் மேலும் மேம்படுத்தப்படும். மத்திய கலாசார அமைச்சுடன் இணைந்து அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவித்தார்.**



ஆளுநர் இல்லத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில் அவர் மேலும் தெரிவிக்கையில்:-

வடக்கில் உள்ள கலாசார விழுமியங்களை மத்திய கலாசார அமைச்சுடன் இணைந்து பாதுகாப்பதற்கு ஏதுவாக துறைசார்ந்த அதிகாரிகளுடன் கலந்துரையாடப்பட்டுள்ளது.

வடக்கில் உள்ள அருங்காட்சியகத்தைப் புதுப்பித்தல், கலைப்பொருள்களின் பிரதிகளைப் புதுப்பித்தல், பாரம்பரிய கைவினைப் பொருள்களை மேம்படுத்துதல், தொல்லியல் மற்றும் இளைஞர்களின் ஆக்கங்களை தொடர்ச்சியாக ஆவணப்படுத்தப்படுத்துதல் உள்ளிட்ட திட்டங்கள் முன்னெடுக்கப்படும்.

யாழ்ப்பாணத்தில் கையளிக்கப்படவுள்ள கலாசார மத்திய நிலையம் எமது மக்களுக்குக் கிடைத்துள்ள ஒரு வரப்பிரசாதமாகக் கருதும் நிலையில், அதனூடாக எமது கலை கலாசார விழுமியங்களை வளர்க்கவேண்டும் - என்றார். (ம-4.27)

# மக்களை வஞ்சிக்கும் அரசு நிலைப்பது சாத்தியமில்லை

## எதிர்க்கட்சித் தலைவர் தெரிவிப்பு

மக்களின் உயிருடன் விளையாடிக் கொண்டிருக்கும் அரசாங்கம் நிலைத்திருக்கச் சாத்தியமில்லை. மக்கள் அரசாங்கத்துக்குப் பதிலடி கொடுக்கக் காத்திருக்கின்றனர் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார். கம்புறுபிட்டிய பிரதேசத்தில் இடம்பெற்ற விவசாயிகள் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

24 மணித்தியாலங்களும் விழிப்புடன் இருக்கும் அரசாங்கம்தான் நாட்டுக்குத் தேவை. நாடு தற்போது நிலவும் சூழ்நிலையில் இருந்து மீண்டு வருவதற்கு வினைத் திறனாகச் செயற்படும் அரசாங்கத்தால் மட்டுமே முடியும். நாட்டைக் கட்டியெழுப்பும் பணியானது தொடர்ச்சியாக மக்கள் சேவையுடன் ஆரம்பிக்கப்படவேண்டும். மக்களின் உயிருடன் விளையாடும் விளையாட்டையே அது செய்து கொண்டிருக்கின்றது. அரசாங்கம் எவ்வளவு தம்பட்டம் அடித்துப் பொய் சொன்னாலும், மக்களுக்கான சந்தர்ப்பம் மிகவிரைவில் வரும். அரசாங்கத்துக்கு மக்கள் சரியான பாடத்தைப் புகட்டுவர் - என்றார். (ம-4.இ)

நாளை 23.03.2022 புதன்கிழமை பங்குனி 09

சுபநேரம் : 04.46 - 06.16
ராகுகாலம்: 12.16 - 01.46

உலக வானிலை தினம்

Digitized by Noolaham Foundation, noolaham.org | aavanaham.org

## ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை

### தலைவாசல் கோபுர கும்பாபிஷேகம்



காலம்:
நாளை 23.03.2022
புதன்கிழமை
நேரம்:
காலை 9.51 – 10.15 மணி
வரை
மதியம் 12.00 மணி
விசேட அன்னதானம்

அனைவரும் வருகைதந்து
அம்பாளின் நல்லருளைப்
பெற்றுய்வீர்களாக

நிர்வாக சபை
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.



## மரண அறிவித்தல்

பிறப்பு 06 - 08 - 1937



இறப்பு 21 . 03 . 2022

### செல்லையா செகராசசேகரம்

துன்னாலை தெற்கு கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் தாமரைக்குளத்தடி துன்னாலை மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா செகராச சேகரம் அவர்கள் நேற்று (21.03.2022) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா சின்னாச்சி தம்பதியினரின் அன்பு மகனும், பரமேஸ்வரியின் அன்புக்கணவரும், காலஞ்சென்ற சின்னத்தம்பி சின்னாச்சி தம்பதியினரின் அன்பு மருமகனும்,ஜெயசீலன் (பொறியியலாளர், கட்டடங்கள் திணைக்களம், வடமாகாணம்), கீதா (ஆசிரியர்,ஆனைப்பந்தி மெதடிஸ்த மிசன் பாடசாலை), சத்தியசீலன் (பிராந்திய முகாமையாளர், கற்றன் நசனல் வங்கி, கிழக்கு மாகாணம்), கிரிஜா (முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர், யாழ் மாநகரசபை), காலஞ்சென்ற தர்மசீலன் ஆகியோரின் அன்புத்தந்தையும், கீதா (அபிவிருத்தி உத்தியோகத்தர்), சத்தியபாலன் (வலயக்கல்விப்பணிப்பாளர், வடமராட்சி.), ச.நீரஜா (பிரதி முகாமையாளர், மக்கள் வங்கி சங்கானை), பா.பிரபாகரன் (ஆயுர்வேத மருத்துவ உத்தியோகத்தர், மத்திய மருந்தகம் கரவெட்டி) ஆகியோரின் அன்பு மாமனாரும், ஜெ.சாரங்கி, ஜெ.புருசோத்தமன், ச.சாயீசன், ச.ஷாருமி, ச.ஷாமிக்கா, பி.நதிநயா ஆகியோரின் அன்புப் பேரனும் செல்லத்துரை, பரஞ்சோதி, காலஞ்சென்ற இரத்தினசிங்கம், தம்பையா, பரராசசேகரம், பாக்கியலட்ஷ்மி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (2022.03.22) செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று தியான்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதனை உற்றார், உறவினர், நண்பர்களிற்கு அறியத்தருகின்றோம்.

தாமரை குளத்தடி,
துன்னாலை, கரவெட்டி.

(CR 8133) (4/6)

தகவல்
குடும்பத்தினர்
தொ.இ:- 077 778 1047



## மரண அறிவித்தல்

தோற்றம் 28 . 05 . 1948



மறைவு 21 . 03 . 2022

### திருமதி சரவணபவன் சரஸ்வதி (சரசு)

அலுக்கைச் சந்தி அளவெட்டி கிழக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரவணபவன் சரஸ்வதி (சரசு) நேற்று (21.03.2022) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சரவணபவனின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற நாகலிங்கம் மற்றும் இராசலட்சுமி, சின்னம்மா, மாணிக்கதியாகராஜா ஆகியோரின் சகோதரியும், கிரிஜா, கிருபாகரன் (ஹொலண்ட்) ஆகியோரின் அன்புத் தாயாரும், கணேசலிங்கம் (ராசன்) சுஜித்தா (ஹொலண்ட்) ஆகியோரின் அன்பு மாமியும், அஷ்வின், அனிஸ், கவின், லக்ஷன், கார்த்திகா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னார் இறுதிக்கிரியைகள் இன்று (22.03.2022) செவ்வாய்க்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, முற்பகல் 11.00 மணியளவில் மல்லாகம் இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

கூட்டுறவாளர் வீதி,
அலுக்கை,
அளவெட்டி கிழக்கு.

0031685142306
0031616444457
076 6433 278

தகவல்:
கணேசலிங்கம்- கிரிஜா - மகள்
சரவணபவன்-கிருபாகரன் - மகன்

(CS 43170)1/6


## விண்ணப்பம் கோரல்

தேசியக் கல்வி நிறுவகத்தால் ஆங்கிலமொழி மூல இரண்டு வருட கல்வியியல் முகாமைத்துவத்தில் முதுகல்விமாணிப் பட்டத்துக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. விண்ணப்பங்களை எதிர்வரும் ஏப்ரல் மாதம் முதலாம் திகதிக்கு முன்பாக கையளிக்க முடியும். (ம-14)

# 7 நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்கள் கொழும்பில்!

### 'பிம்ஸ்டெக்' அரச தலைவர்கள் மாநாடு மார்ச் 30 இல் நடைபெறும்

**கொழும்பு, மார்ச் 22**

**'பிம்ஸ்டெக்' அமைப்பின் அரச தலைவர்கள் மாநாடு மார்ச் 30 ஆம் திகதி ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெறும் என்று வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.**



பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இந்த தகவலை வெளியிட்டார்.

இது தொடர்பில் பீரிஸ் மேலும் கூறியவை வருமாறு:-

இலங்கை, இந்தியா, பங்களாதேஷ், நேபாளம், பூட்டான், மியான்மர் மற்றும் தாய்லாந்து ஆகிய 7 நாடுகள் 'பிம்ஸ்டெக்' அமைப்பில் அங்கம் வகிக்கின்றன.

பிம்ஸ்டெக் அமைப்பின் அரச தலைவர்கள் மாநாடு கடைசியாக 2018 இல் நேபாளம் தலைநகர் காத்மண்டுவில் நடைபெற்றது. இம்முறை இலங்கையில் நடைபெறுகின்றது.

குறித்த அமைப்பின் மாநாடு இலங்கையில் நடைபெறுவதும், அதற்கு இலங்கை தலைமைத்துவம் வகிப்பதும் முக்கியத்துவமிக்க நிகழ்வாகும். மாநாட்டில் பங்கேற்பதற்காக தாய்லாந்து பிரதமர் இலங்கை வரவுள்ளார்.

'பிம்ஸ்டெக்' அமைப்பின் அடுத்த தலைமைப்பொறுப்பை தாய்லாந்தே ஏற்கவுள்ளது.

அந்தப் பதவியை தாய்லாந்து பிரதமர் பொறுப்பேற்பார்.

ஏனைய நாடுகளின் பிரதமர்கள் 'காணொலி' தொழில்நுட்பம் ஊடாகவே மாநாட்டில் பங்கேற்பார்கள்.

அரச தலைவர்கள் மாநாடு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையில் மார்ச் 30ஆம் திகதி ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெறும்.

அத்துடன், 'பிம்ஸ்டெக்' அமைப்பில் அங்கம் வகிக்கும் நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்கள் பங்கேற்கும் மாநாடு, கலந்துரையாடல் மார்ச் 29ஆம் திகதி பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.

7 நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்களும் கொழும்பு வருவார்கள். அதேபோல வெளிவிவகார அமைச்சின் செயலாளர்களின் கலந்துரையாடல், சந்திப்பு மார்ச் 27ஆம் திகதி நடைபெறும் -என்றார். (எ-44)

# விபத்தில் ரஷ்யப் பெண் உயிரிழப்பு

கொழும்பு, மார்ச் 22

காலி- மாத்தறை வீதியின் அஹங்கமவில், மோட்டார் சைக்கிளும் லொறியும் மோதி, இந்த விபத்தில் வெளிநாட்டு பிரஜை ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்றுமுன்தினம் மாலை மாத்தறையிலிருந்து காலி நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிள், லொறியை முந்திச் செல்ல முற்பட்டு வாகனத்துடன் மோதியதில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மோட்டார்சைக்கிளை ஓட்டிச் சென்ற 38 வயதுடைய ரஷ்யப் பெண், விபத்தில் பலத்த காயங்களுக்கு உள்ளாகி உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்படுகிறது.

விபத்து தொடர்பில் லொறி சாரதி கைது செய்யப்பட்டார்.

அஹங்கம பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ-இ)

# கஞ்சாவுடன் ஒருவர் கைது



கொழும்பு, மார்ச் 22

மட்டக்களப்பு- சீலாமுனைப் பகுதியில் கஞ்சா வியாபாரத்தில் ஈடுபட்ட கஞ்சா வியாபாரி கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மாவட்ட பொலிஸ் புலனாய்வு பிரிவுக்குக் கிடைத்த தகவல் ஒன்றையடுத்து, அந்தப் பகுதியிலுள்ள வீடொன்றைச் சோதனையிட்டபோது சந்தேகநபரிடம் இருந்து 200 கிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டது என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபரிடம் விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்றும், சந்தேகநபர் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

(எ-இ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** அலுப்பும் சலிப்பும் வராமல் காத்துக் கொள்ளுங்கள். திட்டம் ஒன்று நிறைவேறும். பிள்ளைகளால் மகிழ்ச்சி தங்கும். சுற்றியிருப்பவர்களின் சுய ரூபத்தைப் புரிந்து கொள்வீர்கள்.

**இடபம்:** குடும்பத்துக்கு அதிர்ஷ்டம் ஏற்படும் நாள். தெய்வீக ஈடுபாடு அதி கரிக்கும். பணியில் முன்னேற்றம் உண்டு. சுயமாகச் சிந்தித்து முடிவெ டுங்கள். கலகலப்பான நாள்.

**மிதுனம்:** தந்தையுடன் கருத்து வேற்றுமை எதுவும் வேண்டாம். கனவுகள் நனவாக சற்று அதிக முயற்சி வேண்டும். மனதில் நல்ல எண்ணங்களும், கருணையும் அதிகரிக்கும்.

**கடகம்:** உடல்நலனில் கவனம் தேவை. பணியில் முன்னேற்றம் உண்டு. மற்றவர்களின்பேச்சுக்குமதிப்பளிப்பீர்கள், திருப்திகரமான நாள். மற்றவர் நலனுக்காகப் பாடுபடு வீர்கள். எதிர்பாராத நன்மை உண்டு.

**சிம்மம்:** தந்தையின் உடல்நலனில் அக்கறை கொள்வீர்கள். பங்குதாரரிடம் இருந்து நற்செய்தி வரும். வாழ்வில் உயரக் காரணமானவர்களிடம் நன்றி பாராட்டு வீர்கள். எதிர்பார்த்த நற்பெயர் கிடைக்கும்.

**கன்னி:** சில நண்பர்கள் நம்பகமானவர் என்பதை உணர்வீர்கள். அதிகமாக உணர்ச்சி வசப்படுவதைத் தவிர்க்க வேண்டும். பிரியமானவர்களின் அன்பைப் பெற்று மகிழ்வீர்கள்.

**துலாம்:** பயணம் செல்லும் திட்டங்களில் மாற்றம் இருக்கும். பணியாளர்கள் பணியிடத்தில் சற்று நிதானத்துடன் பேச வேண்டும். வெளியிடங்களில் செல்வ தற்கு இருந்த தடைகள் நீங்கும்.

**விருச்சிகம்:** எதிலும் நிதானம் தேவை. பணவரவுகள் சுமாராக இருக்கும். அடமானத்தில் இருக்கும் நகைகளை மீட்க முயற்சிப்பீர்கள். திட்டங்களில் தடை வந்தாலும் கூடுதல் முயற்சியால் முடிப்பீர்கள்.

**தனுசு:** பொது இடங்களில் இன்று எந்தவித பிரச்சினைகளிலும் ஈடுபட வேண்டாம். பழைய பிரச்சினைகள் இன்று தலைதூக்கினாலும் அதைத் தகர்ப்பீர்கள். பணிகளை இழுத்துப் போட்டுப் பார்க்கவேண்டி இருக்கும்.

**மகரம்:** புதுமுடிவுகளை ஒத்திப் போடுங்கள். அமைதி கூடும் நாள். குடும்பத்துக்கு இனிய செய்தி வந்து சேரும் நாள். அனுசரித்துப்போக வேண்டியிருக்கும்.

**கும்பம்:** புண்ணியச் செயல்களில் முன்பைவிட ஆர்வம் கூடும். அதிகாரி களுடன் சிறுசிறு வாக்குவாதங்கள் வந்து நீங்கும். கடந்த நாள்களில் உங்களை வாட்டிய பிரச்சினை தீரும்.

**மீனம்:** புது அனுபவம் பெறுவீர்கள். பேச்சில் கவனம் தேவை. உங்களை மற்றவர் புரிந்துகொள்ள அவகாசம் கொடுங்கள். எதிர்பாராத லாபம் கிடைக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சியுடன் இருப்பீர்கள்.






# உக்ரைன் இரசாயன ஆலையில் ரஷ்யா வான்வழித் தாக்குதல்

## 2.5 கி.மீற்றருக்கு அமோனியா வாயு கசிவு

கீவ், மார்ச் 22

உக்ரைனில் நேற்று அதிகாலை ரஷ்யா நடத்திய வான்வழித் தாக்குதலில் இரசாயன ஆலை ஒன்றில் சேதம் ஏற்பட்டு 2.5 கி.மீ தொலைவுக்கு அமோனியா வாயுக் கசிவு ஏற்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

உக்ரைன் மீது 3 வாரங்களுக்கு மேலாக ரஷ்யா தாக்குதல் நடத்தி




வருகின்றது. இதில் 900க்கும் மேற்பட்ட பொதுமக்கள் உயிரிழந்துள்ளனர் எனவும் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர் எனவும் ஐ.நா. மனித உரிமைகளுக்கான தூதரகம் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் ஐரோப்பாவின் மிகப் பெரிய இரும்பு ஆலை மீது ரஷ்யா நேற்று அதிகாலை வான்வழித் தாக்குதல் நடத்தியுள்ளது. இதனால் அந்த ஆலையிலிருந்து அமோனியா வாயுக் கசிவு பரவியுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ராகு-கேது பெயர்ச்சி

## 21.3.2022 முதல் 8.10.2023 வரை



ராகு-கேது பெயர்ச்சி, வாக்கிய பஞ்சாங்கத்தின்படி எதிர்வரும் 21ஆம் திகதி பிற்பகல் 3.02 மணிக்கு பெயர்ச்சி ஆகிறார். இதில் ராகு ரிஷபத்தில் இருக்கும் கார்த்திகை 2ஆம் பாதத்திலிருந்து மேடராசியில் இருக்கும் கார்த்திகை 1ஆம் பாதத்துக்கும், கேது விருச்சிகத்தில் இருக்கும் விசாகம் 4ஆம் பாதத்திலிருந்து, ஜென்ம ராசியான துலாம்ராசி விசாக நட்சத்திரம் 3ஆம் பாதத்துக்கும் பெயர்ச்சியாக உள்ளார். திருக்கணித பஞ்சாங்கத்தின்படி 2022 ஏப்ரல் 12 ஆம் திகதி பிற்பகல் 1.38 மணியளவில் ராகு - கேது பெயர்ச்சி நிகழ்கிறது.

எறும்பைப் போல் சுறுசுறுப்பும், எதுகைமோனையான பேச்சும், சிந்தனையாற்றலும் கொண்டவர் நீங்கள். எதையும் தொலைநோக்குடன் செய்து முடிப்பவர்கள். எப்போதும் மற்றவர்களுக்குச் சவாலாக விளங்கும் மிதுன ராசியினரே சில நேரங்களில் விட்டுக்கொடுத்துப் போவீர்கள். உங்களுக்கு 21.03.2022 முதல் 08.10.2023 வரையிலும் ராகுவும் கேதுவும் என்னென்ன பலன்களைத் தரப்போகிறார்கள் எனப் பார்ப்போம்.

இதுவரை உங்களின் ராசிக்கு பன்னிரண்டில் அமர்ந்து காரியத் தடைகள், மன உளைச்சலைக் கொடுத்துவந்தார் ராகுபகவான். இனி உங்கள் ராசிக்கு லாப வீட்டுக்கு வருவதால் புத்துணர்ச்சியும், புதிய முயற்சிகளில் வெற்றியையும் அதிரடி முன்னேற்றத்தையும் தருவார். கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவீர்கள். சவாலான காரியங்களையும் சாதாரணமாகச் செய்து முடிப்பீர்கள். பணப் பற்றாக்குறையால் அவதிப்பட்டீர்களே, இனி சேமிக்கும் அளவுக்குப் பணவரவு அதிகரிக்கும்.

குடும்பத்தில் எப்போதும் கலகம், கலாட்டா என்றுதானே இருந்தது. இனி அமைதி, சந்தோஷம் நிலைத்திருக்கும். இனி உங்கள் வார்த்தைக்கு முக்கியத்துவம் அளிப்பார்கள். எதிரும்புதிருமாக சண்டை போட்டுக்கொண்டிருந்த கணவன் - மனைவி உறவில் இனி அந்நியோன்யம் அதிகரிக்கும். வீண்செலவுகளைக் குறைத்து அவசிய செலவுகளை மட்டும் செய்வீர்கள். குழந்தைப் பாக்கியம் இல்லாமல் தவித்த தம்பதியருக்குக் குழந்தை வரம் உண்டாகும். கடனை நினைத்து கவலைப்பட்டுக் கொண்டிருந்த நிலை மாறும்.

**சூரியனின் கார்த்திகை நட்சத்திரம் 1ம் பாதத்தில்:** 21.3.2022 முதல் 22.5.2022 முடிய ராகு பகவான் கார்த்கை 1ம் பாதத்தில் செல்கிறார். இக்கால கட்டத்தில் புதிய முயற்சிகள் வெற்றியடையும். இளைய சகோதரர்கள் மூலம் உதவிகள் கிடைக்கும். சொத்துச் சிக்கல் தீரும்.

**சுக்ரனின் பரணி நட்சத்திரத்தில்:** 23.5.2022 முதல் 29.1.2023 முடிய ராகுபகவான் பரணியில் சஞ்சரிக்கிறார். ஆகவே திடீர் பணவரவு உண்டு. பழைய பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்கும். உங்களைக் குறை கூறியவர்களும் இனி பாராட்டுவார்கள்.

**கேதுவின் அச்சுவினி நட்சத்திரத்தில்:** 30.1.2023 முதல் 8.10.2023 முடிய ராகுபகவான் அச்சுவினியில் செல்கிறார். இந்தக் காலக்கட்டத்தில் சற்றுக் கவனம் தேவை. குடும்பத்தில் சிறு சிறு குழப்பங்கள்






ஏற்படலாம். திடீர் செலவுகளால் கையிருப்புக் கரையும்.

**வியாபாரத்தில்:** மறைமுகப் போட்டிகளைச் சமாளிக்க முடியாமல் தடுமாறினீர்களே... கூட இருந்தவர்களே குழிபறிக்கும் நிலைக்கு ஆளானீர்களே... இந்த அவல நிலைகள் மாறும். போட்டியாளர்களுக்கு ஈடுகொடுக்கும் அளவுக்குப் புதுயுக்திகளைக் கையாளுவீர்கள்.

உத்தியோகத்தில் அதிகாரிகளுடன் இருந்த மோதல் போக்கு விலகும். வெகுநாள்களாக எதிர்பார்த்த சம்பள உயர்வு இப்போது கிடைக்கும். உங்களின் திறமைகள் வெளிப்படும். கணினித் துறையினருக்கு வேலைச்சுமை குறையும். அதிக சம்பளத்துடன் கூடிய புது வேலை கிடைக்கும். இதுவரை உங்களின் ராசிக்கு ஆறாம் வீட்டில் அமர்ந்து ஓரளவு பண வரவையும், கொஞ்சம் அலைச்சல் மற்றும் பதற்றத்தையும் கொடுத்து வந்த கேது பகவான், இப்போது உங்கள் ராசிக்குப் பூர்வபுண்ணிய வீடான ஐந்தாம் வீட்டுக்கு வந்து அமர்கிறார். பிள்ளைகளால் உறவினர்கள், நண்பர்கள் மத்தியில் உங்கள் புகழ்கூடும். அதேநேரம், பிள்ளைகள் மூலம் அலைச்சலும் செலவும் உண்டாகும். எதிர்பார்த்த வகையில் உதவிகள் கிடைக்கும். ஆனால் தாய்வழி உறவினர்களுடன் மோதல் வரும்.

**குருவின் விசாகம் நட்சத்திரத்தில்:** 21.03.2022 முதல் 24.09.2022 முடிய கேது விசாகத்தில் செல்கிறார். மனைவியுடன் கருத்துமோதல், வீண் சந்தேகம், வீடு வாகனப் பராமரிப்புச் செலவுகள் வந்துபோகும்.

**ராகுவின் சுவாதி நட்சத்திரத்தில்:** 25.9.2022 முதல் 04.06.2023 முடிய கேது சுவாதியில் சஞ்சரிக்கிறார். மற்றவர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதாக நினைத்து பிரச்சினையில் சிக்கிக்கொள்ளாதீர்கள்.

**செவ்வாயின் சித்திரை நட்சத்திரத்தில்:** 04.06.2023 முதல் 08.10.2023 முடிய கேது சித்திரையில் சஞ்சரிக்கிறார். பழைய கடனை நினைத்து அச்சப்படுவீர்கள். சகோதரர்களிடம் விட்டுக்கொடுத்து போங்கள். உத்தியோகத்தில் வெகு நாள்களாக எதிர்பார்த்த பதவி உயர்வு, சம்பள உயர்வு எல்லாம் இனி உங்களைத் தேடி வரும்.



தேனி சஞ்சிகை ஆசிரியர் அமரர் கணேஷ் கெங்காதரனின் முதலாம் ஆண்டு நினைவை முன்னிட்டு தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் ஜேர்மன் கிளையின் நிதிப் பங்களிப்பில் எழுவைதீவு தோமையார் முன் பள்ளிக்கு மேலைத்தேய வாத்தியக் கருவிகள் வழங்கப்பட்டன. (ச-50)



கிளிநொச்சி, அழகாபுரி கிராம மிதிலன் முன்பள்ளி மாணவர்களுக்கு கனடா ரொரண்டோவில் வசிக்கும் ம.கணேசலிங்கத்தின் நிதிப்பங்களிப்பில் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. (ச-20)



சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் நிர்வாக சபைத் தெரிவு இடம்பெற்றது. இதில் தலைவராக ஸ்ரீகரன், உப தலைவர்களாக உப அதிபர் கண்ணதாசன் மற்றும் சிவரூபன், செயலாளராக ஆசிரியர் பங்கையச் செல்வி , உப செயலாளராக செல்வசந்திரன், பொருளாளராக முரளிதரன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (ச-125)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

புத்திசிகாமணி அன்றூ பிரவீன்
கிராமிய நீர் வழங்கல் அலகு
தேசிய நீர் வழங்கல்
வடிகாலமைப்புச் சபை

## தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின்

# குடிதண்ணீர் வழங்கலின் பாதுகாப்புத் திட்டங்களும் எமது சமூக பொறுப்பும்

மார்ச் 22ஆம் திகதியாகிய இன்று உலக தண்ணீர் தினமாகும். இதை முன்னிட்டு இந்தக் கட்டுரை பிரசுரமாகின்றது. இந்த வருட கருப்பொருள் 'நிலத்தடி நீர் கண்ணுக்குத் தெரியாததைக் காணும் படி செய்தல்' என்பதாக அமைந்துள்ளது.



நிலத்தடி நீர் ஒரு முக்கிய ஆதாரமாகும். இது உலகெங்கிலும் உள்ள அனைத்து குடிதண்ணீரில் பாதியையும், விவசாயத்துக்கு 40 சதவீத நீரையும், தொழிற்றுறைக்குத் தேவையான மூன்றில் ஒரு பங்கு நீரையும் வழங்குகிறது. இது சுற்றுச்சூழலை நிலைநிறுத்துகிறது. ஆறுகளின் அடிப்படை ஓட்டத்தைப் பராமரிக்கிறது மற்றும் நிலச்சரிவு மற்றும் கடல் நீர் ஊடுருவலைத் தடுக்கிறது. நிலத்தடி நீர் என்பது காலநிலை மாற்றம் தழுவல் செயல்முறையின் ஒரு முக்கிய பகுதியாகும், மேலும் பாதுகாப்பான நீர் கிடைக்காத மக்களுக்கு இது ஒரு தீர்வாகும். இந்த ஈர்க்கக்கூடிய உண்மைகள் மற்றும் புள்ளிவிவரங்கள் இருந்த போதிலும், கண்ணுக்குத் தெரியாத நிலத்தடி நீர் பெரும்பாலான மக்களுக்கு கண்ணுக்குப் புலப்படாமல் உள்ளது. மனித நடவடிக்கைகள் மற்றும் காலநிலை மாறுபாடு ஆகியவை நிலத்தடி நீர் ஆதாரங்களின் மீதான அழுத்தத்தை விரைவாக அதிகரித்து வருகின்றன. உலகின் பல பகுதிகளில் பற்றாக்குறை மற்றும் மாசுபாடு பிரச்சினைகள் பதிவாகியுள்ளன. நிலத்தடி நீர் குறித்த உலக நீர் தினம் இந்தக் கண்ணுக்குத் தெரியாத வளத்தின் மீது ஒரு கவனத்தை ஈர்த்து, அறிவுப் பரிமாற்றம் மற்றும் ஒத்துழைப்பை மேம்படுத்துகிறது.


நிலத்தடி நீர் எம் வாழ்க்கையை வளமாக்கும் புதையல். உலகிலுள்ள அனைத்துத் திரவ நன்னீரும் நிலத்தடி நீராகும். காலநிலை மாற்றம் மோசமாகும்போது, நிலத்தடி நீர் மேலும் மேலும் முக்கியமானதாக மாறும். இந்த விலைமதிப்பற்ற வளத்தை நிலையான முறையில் நிர்வகிக்க நாம் ஒன்றிணைந்து செயற்படவேண்டும். பாதுகாப்பான குடிதண்ணீர் என்பது அடிப்படை மனித உரிமையாகவும் மனிதனுடைய சுகாதாரத்துக்கு இன்றியமையாததாகவும் காணப்படுகின்றது. தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை தனது 333 நீர் வழங்கல் திட்ட செயற்பாடுகளில் 172 நீர் வழங்கல் திட்டங்களில் நீர் பாதுகாப்புத் திட்டத்தைச் சிறப்பான முறையில் அறிமுகப்படுத்தி அதற்கூடாகப் பொதுமக்களுக்கு வழங்கப்படும் குடிதண்ணீரின் பாதுகாப்பை உறுதிசெய்து வினைத்திறனாகவும் தடையின்றி வழங்குவதற்கான ஆயத்தங்களையும் செய்து வருகின்றது.

நீர் வழங்கலின்போது நீரேந்து பிரதேசத்தில் இருந்து பாவனையாளர் வரையான ஒவ்வொரு படிமுறையிலும் வரக்கூடிய அபாயங்களை மதிப்பீடு செய்தலும் அதனை முகாமைத்துவம் செய்தல் மூலமும் குடிதண்ணீரின் பாதுகாப்பை உறுதி செய்து வினைத்திறனை அதிகரித்தல் நீர் பாதுகாப்புத்திட்டம் எனக் கருத்தில் கொள்ளப்படுகின்றது.

### நீர்ப் பாதுகாப்பின் படிமுறைகள்

நீர் பாதுகாப்புத்திட்டத்தின் 11 படிமுறைகளாக

- நிபுணர் குழுவை ஒன்று சேர்த்தல்
- நீர் வழங்கல் திட்டத்தை விவரித்தல்
- ஆபத்துகளை இணங்காணல்
- கட்டுப்பாட்டு நடவடிக்கைகள்
- முன்னேற்றமும் மேம்படுத்தல் திட்டமும்
- கட்டுப்பாட்டு நடவடிக்கைகளைக் கண்காணித்தல்
- நீர் பாதுகாப்புத்திட்டத்தின் செயற்றிறனை சரிபார்த்தல்
- நீர் பாதுகாப்புத்திட்ட முகாமைத்துவ நடைமுறைகள்
- ஆதரவுத் திட்டங்களை முன்னெடுத்தல்
- ஆவணப்படுத்தல்
- கால ஒழுங்கின் அடிப்படையில் மீளாய்வுக்குட்படுத்துதல் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.



மேற்குறிப்பிடப்பட்ட படிமுறைகளினூடாக நீர் வழங்கலின்போது நீரேந்து பிரதேசத்தில் இருந்து பாவனையாளர் வரையான ஒவ்வொரு படிமுறையிலும் வரக்கூடிய அபாயங்களை மதிப்பீடு செய்தலும் அதனை முகாமைத்துவம் செய்தல் மூலமும் குடிதண்ணீரின் பாதுகாப்பை உறுதிசெய்து வினைத்திறனை அதிகரித்தலினூடாக நீர் பாதுகாப்புத் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தாலும் இந்தச் செயற்பாடுகள் பற்றிய பொதுமக்கள் மற்றும் நீர் வழங்கல் செயற்பாடுகளுடன் தொடர்புடைய அனைத்து மட்ட நபர்களினதும் தெளிவுபடுத்தல் குறைவாகக் காணப்படுகின்றது. எனவே உரிய நபர்கள் மற்றும் நீர்ப்பாவனையாளர்களுக்கு விழிப்புணர்வு வழங்கப்பட வேண்டிய அவசியம் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபைக்கு இருக்கின்றது.



'அனைவருக்கும் குடிநீர்' என்ற அரசாங்கத்தின் தேசிய கொள்கையை வலுச்சேர்க்கும் 2025ஆம் ஆண்டுக்குள் நாடு முழுவதும் உள்ள ஒவ்வொரு வீட்டுக்கும் சுத்தமான குடிதண்ணீர் விநியோகத்தை உறுதி செய்யும் செயற்பாடுகளில் ஆறுகள், நீரோடைகள் மற்றும் நீரேந்து பிரதேசங்களை சுத்தப்படுத்துதல் மற்றும் பாதுகாத்தல் தொடர்பில் விசேட கவனம் செலுத்துகை தற்போது நடைமுறைக்கு வந்துள்ளது.

அடுத்த மூன்று ஆண்டுகளில் 4.7 மில்லியன் குடும்பங்களுக்கு குடிதண்ணீர் வசதியை வழங்க அரசாங்கம் எதிர்பார்க்கிறது. உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிதியில் செயற்படுத்தப்படும் இத்திட்டத்தினூடாக, 40 ஆயிரம் கிலோமீற்றர், புதிய குடிதண்ணீர் குழாய்கள் பொருத்தப்படவேண்டும். இதுவரை குடிதண்ணீர் விநியோகத்துக்குச் செலவிடப்பட்ட தொகையின் பாதியில் இத்திட்டம் முடிக்கப்பட உள்ளது. நீர் உற்பத்தி மற்றும் பாதுகாப்பு மற்றும் நீர் ஆதாரங்களை கண்டறிதல் ஆகியவை திட்டத்தின் சில அம்சங்களாகும். நீர் ஆதாரங்களைப் பாதுகாக்க மரம் நடும் செயற்பாடுகளும் இந்தக் கொள்கை நடைமுறையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

மழைநீர் சேகரிப்பு மற்றும் இந்தத் தீவில் உள்ள குளங்கள் மற்றும் நீர்த்தேக்கங்களின் கொள்ளளவை விரிவாக்குவது மற்றும் புதிய நீர்த்தொட்டி மற்றும் நீர்த்தேக்க வலையமைப்பை நிர்மாணிப்பது தொடர்பானவையும் தண்ணீர் பற்றாக்குறை உள்ள பகுதிகளுக்கு தண்ணீர் கொண்டு செல்ல புதிய கால்வாய்கள் மற்றும் குழாய்கள் கொண்ட திட்டங்களை அறிமுகப்படுத்துவதும் அடங்கி இருக்கின்றன.

### நீர் வழங்கல் செயற்பாடுகளில் எமது சமூகப் பொறுப்புக்கள்

கொழும்பு மாவட்டத்தில் மட்டும் மொத்த நீர் விநியோகத்தில் 45 சதவீத நீர், கசிவு காரணமாக வீணாகியுள்ளது. நீர்ப்பாதுகாப்புத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதனூடாக சில மாதங்களுக்கு முன் புதிய குடிதண்ணீர் குழாய்கள் பதிக்கப்பட்டதால், அது 15 சதவீத மாக குறைந்துள்ளது. குடிதண்ணீரைப் பாதுகாக்கும் வகையில், நீர்க் கசிவை ஏற்படுத்தும் பழைய குழாய்களுக்குப் பதிலாகத் தற்போது புதிய குழாய்கள் பதிக்கப்படும் செயற்பாடுகள் துரிதகதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவ்வாறாக தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை பொதுமக்களுக்கான சேவையை வழங்கும்போது எமது மக்களும் நீர்க் கசிவுகள் மூலம் சபைக்கும் அரசாங்கத்துக்கும் ஏற்படும் அழிவுகள் மற்றும் இழப்புக்களைக் குறைக்க உதவுதல் அத்தியாவசியமாகின்றது.

பொதுமக்கள் தாம் வசிக்கும் பிரதேசத்தில் நீர்க்கசிவைக் கண்டால் அல்லது தாம் செல்லுமிடங்களில் நீர்குழாய் மூலம் நீர் வீணாக செல்வதை அவதானித்தால் அதனை தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபைக்கு அறிவித்தல் மிகப்பெரும் சமூக பொறுப்பாகும். 1939 என்ற இலக்கத்துக்கு அழைப்பதன் மூலம் (இதற்கு கட்டணம் அறிவிடப்படுவதில்லை) இத்தகைய வள இழப்பில் இருந்து நாட்டைக் காப்பாற்றும் செயற்பாடுகளில் பொதுமக்கள் இணையவேண்டும். மேலும் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபைக்குச் சொந்தமான நீர் வழங்கலுடன் தொடர்புடைய அனைத்து நீர்க்குழாய்கள் மற்றும் சொத்துகளுக்கு எந்தவிதமான சேதங்களும் ஏற்படாதவகையில் பாதுகாக்க அனைத்துப் பொதுமக்களும் முன்வரவேண்டும்.

### மனிதனின் வாழ்க்கைக்கு தவிர்க்க முடியாத வளம்

நிலத்தடி நீர் இல்லாமல் வாழ்க்கை சாத்தியமில்லை. உலகின் பெரும்பாலான வறண்ட பகுதிகள் முழுக்க முழுக்க நிலத்தடி நீரையே சார்ந்துள்ளன. குடிதண்ணீர், சுகாதாரம், உணவு உற்பத்தி மற்றும் தொழிற்றுறை செயல்முறைகளுக்கு, நாம் பயன்படுத்தும் தண்ணீரின் பெரும்பகுதியை நிலத்தடி நீர் வழங்குகிறது.

நிலத்தடி நீர் என்பது நீர்நிலைகளில் நிலத்தடியில் காணப்படும் நீர். அவை பாறைகள், மணல் மற்றும் சரளைக் கற்களின் புவியியல் அமைப்புகளாகும், அவை கணிசமான அளவு தண்ணீரைக் கொண்டுள்ளன.

நிலத்தடி நீர் நீரூற்றுகள், ஆறுகள், ஏரிகள் மற்றும் சதுப்பு நிலங்களுக்கு உணவளிக்கிறன. மேலும் பெருங்கடல்களில் ஊடுருவுகின்றன.

நிலத்தடி நீர் மழை மற்றும் பனிப்பொழிவு ஊடாக தரையில் ஊடுருவி மீள்நிரப்பப்படுகின்றது. சதுப்பு நிலங்கள் மற்றும் ஆறுகள் போன்ற சுற்றுச்சூழல் அமைப்புகளின் ஆரோக்கியமான செயற்பாட்டுக்கும் இ[illegible]து முக்கியமானதாகும்.

> நிலத்தடி நீர் எம் வாழ்க்கையை வளமாக்கும் புதையல். உலகில் உள்ள அனைத்து திரவ நன்னீரும் நிலத்தடி நீராகும். காலநிலை மாற்றம் மோசமாகும்போது, நிலத்தடிநீர் மேலும் மேலும் முக்கியமானதாக மாறும். இந்த விலைமதிப்பற்ற வளத்தை நிலையான முறையில் நிர்வகிக்க நாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3ஆம் ஆண்டு நினைவு



மண் உலகில் 14 . 03 . 1936

விண் உலகில் 25 . 03 . 2019

அமரர்

## செல்லையா இராசலிங்கம்

திதி அபரபக்ஷ பஞ்சமி

கண்கள் இமைக்க மறந்தது
இதயம் துடிக்க மறுத்ததோ ஐயா!
எம் இல்லத்தின் ஆணிவேராய் எம்மைப்
பேணிக் காத்தீரோ? ஏன் எம்மை பிரிந்தீர்?
நீங்கள் எம்மை விட்டு பிரிந்து
மூன்று ஆண்டுகள் ஆனதோ ஐயா!
ஆனாலும் எம் இதயம் உம்மையே
தேடுகிறது இன்று வரை.
நீர் எம்முடன் இல்லை என்பதை
ஏனோ எம் இதயம் ஏற்க
மறுக்கிறது ஐயா!
உம்மைத் தேடாத நாள் இல்லை
இன்று வரை நாம் சுவாசிக்கும்
இறுதி மூச்சுவரையும் நீர் எம்
இதயத்தில் வாழ்வீர்

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்



## திருமதி. தனலட்சுமி பேரம்பலம்

இளைப்பாறிய ஆசிரியை (நெடு/சைவப்பிரகாசா வித்தியாலயம், கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை, யாழ் இந்து ஆரம்பப் பாடசாலை)

நெடுந்தீவு மேற்கைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் கொக்குவில், கொழும்பை வதிவிடங்களாகவும் கொண்ட தனலட்சுமி பேரம்பலம் (இளைப்பாறிய ஆசிரியை) அவர்கள் 20.03.2022 ஞாயிற்றுக்கிழமை அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா பேரம்பலம் (இளைப்பாறிய கொத்தணி அதிபர்) அவர்களின் அன்புத் துணைவியும் காலஞ்சென்றவர்களான சுவாமிநாதர் (இளைப்பாறிய அதிபர்) சின்னம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்-களான கந்தையா சின்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும் மணிவண்ணன், சிவாஜினி (UK), பாமினி ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஜீவாகரன் (Solicitor-UK), சிவகுமார் ஆகியோரின் அன்பு மாமியாரும் பிரவணன், விஷானி ஆகியோரின் அன்பு அம்மம்மாவும் காலஞ்சென்றவர்களான தர்மரட்னம், சிவகாமியம்மா, சுந்தரம்மா, சிவஞானவதி, புவனேஸ்வரி மற்றும் திருநாவுக்கரசு ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற தங்கம்மா மற்றும் கமலாவதி, பரமலிங்கம், இலட்சுமணன் மற்றும் காலஞ்சென்றவர்களான இராஜலட்சுமி, கணபதிப்பிள்ளை, பசுபதிப்பிள்ளை, இரா.சின்னத்தம்பி மற்றும் S.R.பசுபதி, கமலாதேவி ஆகியோரின் மைத்துனியும் காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை, கந்தையா மற்றும் சைலாவதி, தவராணி ஆகியோரின் சகலியும் ஆவார்.

**அன்னாரின் பூதவுடல் 22.03.2022 செவ்வாய்க்கிழமை காலை 08 மணியிலிருந்து பொரளை ஜெயரட்ன மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுப் பகல் 01.00 மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று பொரளை கனத்தை மயானத்தில் தகனம் செய்யப்படும்.**

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

Mob: 077 6909811

தகவல் குடும்பத்தினர்.

## திட்டமிடப்பட்ட திகதிகளில் பரீட்சைகள் நடைபெறும்



கொழும்பு, மார்ச் 22 காகிதத் தட்டுப்பாடு காரணமாக மேல் மாகாண பாடசாலைகளில் பிற்போடப்பட்டதாக அறிவிக்கப்பட்ட பரீட்சைகள் உரிய திகதிகளில் நடைபெறும் என்று தற்போது தெரிவிக்கப்பட்டுள்ளது. 9, 10 மற்றும் 11ஆம் தரங்களுக்கான பரீட்சைகளே உரிய திகதிகளில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. பரீட்சை வினாத்தாள்களை அச்சிடுவதற்கு தேவையான காகிதாதிகள் வலயங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப் பட்டது. (ய)

# மரண அறிவித்தல்



மலர்வு 10 - 03 - 1936

உதிர்வு 20 - 03 - 2022

## திருமதி பொன்னம்பலம் இரத்தினேஸ்வரி (பட்டு)

கொக்குவில் மேற்கு மணியர்பதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பொன்னம்பலம் இரத்தினேஸ்வரி (பட்டு) நேற்றுமுன்தினம் (20.03.2022) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசா (சோக்குராசா) ஆச்சிமுத்து தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான தம்பிஐயா இராசம்மா (அம்மாச்சி) தம்பதியரின் ஆசை மருமகளும், காலஞ்சென்ற பொன்னம்பலத்தின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்ற இராசலட்சுமி, பவளம், சீவரத்தினம், பூபாலசிங்கம் மற்றும் பத்மாவதி ஆகியோரின் அன்புச் சகோதரியும், வனஜா, சிவராஜா (ரஞ்சன்), சிவனேசன் (சிவன்), சிவரூபன், கிருஜா, கிருபாகரன், சிவகரன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், கிருஷ்ணானந்தன் (ஐயாகட்டி), மாலா, சுமதி, சுதாஜினி காலஞ்சென்ற கிருஷ்ணகுமார், ஜெயந்தி, பமிலா ஆகியோரின் பாசமிகு மாமியாரும், கவிதா, மேனன், நவநீதன், உசா, நிசா, சனோஜன், விதுஷா, கிருத்திகா, றாக்கி, சுலக்ஷன், றோசன், சாருகி, சகிரா, சபிரா, தரணிகா, துவாரகன், மிதுசா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் மற்றும் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.03.2022) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

0094 76 603 7506
0033 62 747 2433

(CS 18980) (4/6)

தகவல்:
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்



மலர்வு 24 - 02 - 1941

உதிர்வு 21 - 03 - 2022

## திருமதி கமலாம்பிகை கந்தசாமி

(இளைப்பாறிய பிரதம மருந்தாளர், யாழ்.,கிளிநொச்சி அரசினர் வைத்தியசாலை)

சிவகாமி அம்மன் கோவில் வீதி காரைநகரைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் மேற்கு, முல்லைத்தீவு தற்போது கனடாவை (Canada) வசிப்பிடமாகவும் கொண்ட கமலாம்பிகை கந்தசாமி நேற்று (21.03.2022) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அம்பலம்-பாக்கியம் தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கதிரமலை-சௌந்தரம் தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற கதிரமலை கந்தசாமி (ஓய்வுநிலை கிராம உத்தியோகத்தர், நல்லூர்) அவர்களின் பாசமிகு மனைவியும், கமலவதனி (கனடா), காலஞ்சென்ற திவாகரன் ஆகியோரின் அன்பு தாயாரும், உதயகுமார் (கனடா), தர்மினி ஆகியோரின் அன்பு மாமியாரும், ஜெனிபரின் அன்புப் பேர்த்தியும், சதாசிவம், மதியாபரணம், மகேஸ்வரி ,விமலாதேவி, சதிலீலாவதி, கலாரூபவதி, புவனேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிவகாமி அம்மன் வீதி,
காரைநகர்.

தகவல்:
ஜெ.விமலாதேவி (சகோதரி)- 076 604 5148
ஜெ.ஐங்கரன் (பெறாமகன்)- 076 015 4710

(CS 18976) (4/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம் 14 . 03 . 1940



மறைவு 21 . 03 . 2022

## சுப்பிரமணியம் நடராசா

**(ஓய்வுநிலை மின்னியலாளர், நகரசபை, சாவகச்சேரி)**

சாவகச்சேரி, கிராம்புவிலை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிர மணியம் நடராசா அவர்கள் நேற்று (21.03.2022) திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் பரமேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும், மகாலட்சுமி, அமரர் தியாகராசா, விசயலட்சுமி, சிவராசா, பாக்கியராசா, தனலட்சுமி, அமரர் மகேந்திரராசா, நித்தியலட்சுமி ஆகியோரின் சகோதரரும், ஜெயராணி, ஜெயக்குமார் (தபாலகம்- சாவகச்சேரி), ஜெயலலிதா, பாலகுமார் (தொழில்நுட்ப உத்தியோகத்தர் - பிரதேச செயலகம், கரவெட்டி), லிபன் (இலங்கை போக்குவரத்துசபை உத்தி யோகத்தர்- பருத்தித்துறை) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சந்திரராசா (ஓய்வு நிலை முகாமைத்துவ உத்தியோகத்தர்-தென்மராட்சி வலயம்), மங்களேஸ்வரி ஆசிரியர் - யா/ மட்டுவில் தெற்கு அ.மி.த.க பாடசாலை), பாலசுப்பிரமணியம், திருவாணி (ஆசிரியர், யா/ சரசாலை ஸ்ரீகணேச வித்தியாலயம்), மயூரதி ஆகி யோரின் மாமனாரும், யதீசன், யபோசன், சுஹேசினி, காருசன், கீர்த்தனன், கிரிஜா, திவ்வியா, கிஷானி, தர்சனா, திருசிகன், அருண்யன், அருணியா, கேஷாந், அபினாஷ் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.03.2022) அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் முற்பகல் 11.00 மணியளவில் கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


**தகவல்:**

**கிராம்புவில், சாவகச்சேரி.** **குடும்பத்தினர்**

(CR 8132) 1/6

# மரண அறிவித்தல்

தோற்றம் 16 - 10 - 1935



மறைவு 19 - 03 - 2022

## சின்னப்பு விசுவலிங்கம் (சீனித்தம்பி)

ஈவினை புன்னாலைக்கட்டுவன் வடக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சின்னப்பு விசுவலிங்கம் (சீனித்தம்பி) அவர்கள் கடந்த (19.03.2022) சனிக்கிழமை காலமானார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னப்பு, பாக்கியம் அவர்களின் மகனும், பூரணசந்திரா அவர்களின் கணவரும் காலஞ்சென்றவர்களான சிவசம்பு, நல்லம்மா அவர்களின் மருமகனும் அகல்யா (Switzerland) சுஜிதா (Norway) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், சோதிநாதன் (ரகு Switzerland), சுதாகரன் (Norway) ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் (இலங்கை), தர்மலிங்கம் (UK), நல்லம்மா (Malaysia) மற்றும் ராசம்மா (UK) ஆகியோரின் சகோரரும் நிவீத்தா, அஸ்வினி, ஸ்வேதா (Switzerland) சுருதிகா, பரணிகா (Norway) ஆகியோரின் பேரனும், காலஞ்சென்ற அழகானந்தன் (Nigeria), அழகேஸ்வரி (இலங்கை), இராமகிருஸ்ணன் (இலங்கை) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஈமைக்கிரியைகள் நாளை (23.03.2022) புதன்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று ஈவினை விலங்கன் இந்து மயானத்திற்கு பூதவுடல் எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல் : குடும்பத்தினர்**

(CSCS 16979) (3/6)

# முதலாமாண்டு நினைவஞ்சலி



## அமரர் தம்பிஐயா பரமேஸ்வரன்

**(B.B.A) (ஓய்வு பெற்ற ஆசிரியர்)**

**தோற்றம்** 03.05.1947 **மறைவு** 01.04.2021

முற்பிறப்பின் தவப்பயனாய் எங்களுக்குக்கிடைத்தீர்
மனைவி, பிள்ளை உயிரெனவே கொண்டிங்கு வாழ்ந்தீர்
எப்பொழுதும் எங்களுக்காய் இரவு பகல் பாராது
உழைத்துழைத்து எம்நிலையை உயர்த்தி வைத்தீர் அப்பா

கல்விதரும் ஆசிரியத் தொழில் புரிந்தீர் சிறப்பாய்!
கொக்குவில் இந்து அன்னை உம்மாலே உயர்ந்தாள்
எல்லோரும் பரமேஸ்வரன்சேர் என்று போற்ற
வர்த்தகத்தை வடிவாகக் கற்பித்தீர் நீரே!

ஓய்வு பெற்ற காலத்தும் ஓய்ந்திருத்தல் இன்றி
விவசாயத் தொழில் செய்து சுறுசுறுப்பாய் இருந்தீர்
யாவருமே கலங்கியழ ஏன்பிரிந்து சென்றீர் ?
ஆண்டுபல ஆனாலும் உமை மறக்க மாட்டோம்.


இராஜபதி
இணுவில் மேற்கு

**குடும்பத்தினர்**

(CS 43723) (3/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவழியா ஓராண்டு நினைவுகள்



மட்டுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும்
சிவகுருநாதர் வீதி, யாழ்ப்பாணத்தை
வதிவிடமாகவும் கொண்ட
**ஆரம்பக் கல்வி முன்னோடி ஆசிரியர்**
**யா/ செட்டித்தெரு மெ.மி.த.க. பாடசாலை**

## அமரர்
## வேலுப்பிள்ளை அன்பழகன்
## அவர்கள்

**மண் மகிழ** **31.10.1974** — **கண் நெகிழ** **02.04.2022**

பல வருடங்களாக யாழ் இந்து ஆரம்பப் பாடசாலையை பெருமைப்படுத்திய சாதனையாளனாக மட்டுமன்றி ஏனைய பாடசாலை மாணவர்களையும் சாதனை படைக்க வைத்த நிபுணன் ஆடிப்பாடி ஆனந்தமாக வகுப்பை நடாத்தி தன் பெருமையை நிலை நாட்டிய இவரை இனி எங்கே சந்திப்போம். தனது வித்துவத்தால் எத்தகைய உயர் பதவி வகித்தவர்களையும் தன் கல்விச் சாலை வாசலிலே காத்திருக்க வைத்த கல்வியாளன். எல்லாமே கண்ணூறுபட்டது போல் கதை முடிந்தது. எம்மண்ணில் ஏதோ தவக்குறைவு உன்னைப் பாதி வயதில் இழந்திட்டோம்.

**- கலாநிதி ஆறுதிருமுருகன்**

---

அன்பழகன் ஓர் அற்புதமான ஆசிரியர். ஆசிரியத்துவம் என்ற பண்பிற்கே விளக்கமாக நின்றவன். குழந்தை மையக்கல்வி, பிள்ளை மையக்கல்வி, மாணவர் மையக்கல்வி என கல்வியுலகில் பேசப்படும் கோட்பாட்டுக் கருத்தியல்களை இவர் தன் வகுப்பறைச் செயற்பாடுகளில் பிரதிபலித்தவர். குழந்தைகளுக்குக் கற்பிக்கும் போது குழந்தையாகவே மாறுகின்ற சுபாவம் தனித்துவ அடையாளமாகும். "ஆசிரியரியல்" என்னும் அர்த்ததை வலுப்படுத்திய நாம் தரிசித்த தனித்துவமான ஆளுமைமிக்க பண்பாளனின் பிரிவுத் துயரால் குடும்பமும் ஒட்டு மொத்த சமூகமும் கதி கலங்கிப் போயிருக்கின்றோம். அழிவற்ற அந்த ஆத்மா தன் வல்லமைகளினால் தான் சார்ந்தவர்களின் நலன்களை ஆசீர்வதித்த வண்ணமிருக்கும்

ஓம் சாந்தி **- துணைவேந்தர்**
**பேராசிரியர் சி. சிறிசற்குணராசா**

---

நினைவோடு கனவெல்லாம் மாணவரைச் சிறப்பாக்கி தனையறுத்தே மாணவத்தை மேன்மையுற வழிகாட்டி முனைப்போடு யாழ் மண்ணில் வரலாறு படைத்திட்ட இணையில்லா அன்பழகா மறைந்தனையோ நினைவு கூர்வோம் பிள்ளைகளின் தரத்தினையும் குறையினையும் சீர்தூக்கி உள்ளன்பால் பிள்ளைகளின் பெற்றோர்க்கு அதையுரைத்து அள்ளக் குறையாத ஆற்றலினை ஊட்டிவிட்ட வள்ளலே அன்பழகா மறைந்தனையோ நினைவு கூர்வோம்.

**மாவட்ட நீதிபதி**
**திரு. சி. சதீஸ்தரன்**

---

கற்பித்தலில் புதுமைகளைப் புகுத்தும் வேட்கை அன்புவிடம் இயல்பாகவே மிளிர்ந்தது. உவமை, உருவகம் இரட்டைக்கிளவி, இணைமொழி, அடுக்குத் தொடர் என யாவும் கனகச்சிதமாகச் சினிமாப் பாடல்களால் பிள்ளைகளிடம் உதாரணப்படுத்தினான். அவன் கற்பித்தல் பாணி பிள்ளைநேயக் கற்பித்தலாகவே அடையாளப்படுத்தப்படும். அவன் ஊக்கப் பரிசாக வழங்கிய பத்து ரூபா நோட்டை மாணவப்பருவத்தில் பெற்று இன்றும் பத்திரமாக் வைத்திருக்கும் மருத்துவர்களைக் கூடக் கண்டிருக்கின்றேன். விதி வாழ்ந்து சாதிக்க வேண்டியவனை தன்வசப்படுத்திவிட்டது. அவன் விட்டுச் சென்ற, காட்டி நின்ற அனைத்துப் பண்புகளும் எம்முன் செறிய அவனை எம்முள் சுமப்போமாக

**செந்தமிழ்ச் சொல்லருவி சந்திரமௌலதீசன்**

---

புலமை எழுதும் மழலைகளுக்கெல்லாம் கால் கொண்டு நடந்த கடவுளானாய் மாகாணம் அழைக்கும் வேளை அரவணைத் தாய். உன் உதவிகள் நினைத்து கடன் காரனானது கல்வித் திணைக்களம் விதியெனும் தேவன் விபரீதம் புரிந்தான். ரணமான தேகம் குணமாகுமென்று எமக்குள் பிறந்தது நம்பிக்கை உன்னை எண்ணி நேர்த்திகள் வைத்தோம் நேர்ந்தது என்ன. வானம் விழுந்தது வந்த செய்தி கேட்டு விழிகளில் கொதிநீர் வடிந்தது ஆரம்பக்கல்விக்கு நிழல் தந்த மரம் அந்தகனாம் சாவு தொடுத்ததோ உயிர் மண் ணிடை மறைந்தாலும் மனத்திடை வாழுகின்றாய்.

**A.S சற்குணராசா**
**(மாகாணப் பிரதிக் கல்விப்பணிப்பாளர்)**

---

ஆரம்பக்கல்வியில் தன்னைத் தடம் பதித்த அன்பழகன் தான் கடமையேற்ற நல்லூர் கோட்ட பாடசாலைகளில் வினைத் திறனுடனும் விளைதிறனுடனும் ஆற்றிய பணியால் யாழ். கல்வி வலய முன்னணிப் பெறுபேறுகள் மிக உயர்வாக விளங்கின சிறந்த பண்பாளன் மாணவர் மையக் கற்பித்தலில் யுத்திகளைப் பிரயோகித்து ஆத்மார்த்தமாக கற்பித்த பெரும் சிற்பி அவரது இழப்பால் எமது கோட்டமும் யாழ்ப்பாணக் கல்வி வலயமும் கண்ணீர் துளிகளை என்றும் காணிக்கையாக்கி நிற்கின்றது.

**திரு. F.X. அன்ரன்**
**கோட்டக்கல்விப் பணிப்பாளர்.**

---

கனிவான பேச்சு கண்ணியமான நடத்தைப் பாங்கு அர்ப்பணிப்பான சேவை என அனைத்தையும் உள்ளடக்கிய உள்ளிடலாக அன்பழகனைப் பார்க்கின்றேன். புலமைப்பரிசில் பரீட்சை வரலாற்றில் அன்பழகன் தனித்த ஓர் வரலாற்று நாயகன் அர்ப்பணிப்புடன் சேவையாற்றும் ஆசிரியர்களின் எண்ணிக்கை வீழ்ச்சியடைந்து வரும் இக்காலகட்டத்தில் அன்பழகனின் தனித்துவம் கொண்ட மறக்க முடியாத நல்லாசான் எண்ணற்ற நற்பண்புகளால் தனக்கென தனி இடத்தைப் பிடித்த மேன்மை மிக்க ஆசிரியர். வலய ரீதியாக போட்டிகள், தரவட்டங்கள், செயலமர்வுகள், செயலட்டை, வினாப்பத்திரங்கள் தயாரிப்புக்கள் அனைத்திலும் முன்நின்று செயலாற்றும் மறக்கமுடியாத நினைவலைகள். இவரது இழப்பானது கல்விச் சமூகத்திற்கான இழப்பாகவே அமைந்துள்ளது. கல்விச் சமூகத்தின் கண்ணீர் தடங்களின் மேலே அவரின் நினைவழியா எண்ணக்கோலங்களைக் காண்கின்றேன்.

**திரு. ப. சசிக்குமார்**
**உதவிக் கல்விப்பணிப்பாளர்**

---

பிஞ்சு மனம் பெயருக்கேற்ற அழகன், அன்பு, கனிவு, பரிவு, ஆற்றல்களால் விஞ்சி நிற்கும், உள்ளம், சினம், கொள்ளாச் செம்மல், கல்வியுலகில் கரைகாணா காருண்ணியன், சிறந்த எழுத்தாளன், கவிஞன், மொழிநடையாளன், கல்வியை இனிக்கக் குழைத்து ஊட்டும் அருளாளன், பாடல், ஆடல், சித்திரம், பேச்சுக்களில் வல்லவன், பண்பால் தெய்வீகமானவன், கொடுத்துச் சிவந்த செம்மையாளன், தேடிவருவோரின் ஐயங்களுக்கு விளக்கமளிப்பவன், மாணவர்நேயம் தொடர தொடர்பில் இருப்பவன், ஆசிரியர்களின் வாஞ்ஜைகளுக்கும் அவர்களின் வாண்மை விருத்திக்கும் நம் மண்ணில் காரணகர்த்தவாக விளங்கியவன், இத்தகைய பிறவி இன்று எம்மிடையே இல்லை எனும் போது ஏற்படும் துயரத்திற்கு அளவேயில்லை

ஓம் சாந்தி!

**ஓய்வு நிலை அதிபர்**
**திரு.வே. ஞானகாந்தன்**

---

தன்னிடம் வருகின்ற மாணவர்களை நல்லறிவு சார்ந்தவர்களாக பெற்றோர்களிடம் கையளிக்க வேண்டுமென்ற மன வலிமை கொண்டு செயற்பட்ட பண்பாளன், தான் கற்பித்த பாடசாலை நிர்வாகத்தினருடனும் ஆசிரியர்களுடனும் நிறுவன நன்நோக்கு முயற்சியாளனாக ஒன்றிணைந்து செயற்பட்டு தனக்கென தனியான முத்திரையைப் பதித்துக் கொண்டவர். யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையின் வளர்ச்சிப் பாதையில் இவர் ஓர் மைற்கல் என்றால் மிகையாது. இப்பாடசாலையை 5S, 6S செயற் திட்டங்களில் முதன்மை பெற வைத்த பெருமை இவரைச் சார்ந்தது. இவரது அர்ப்பணிப்பான சேவையும் தூய சிந்தனை நோக்கும் தனது 46 வயதினுள்ளே அனைத்து பேறுகளையும் சாதனைகளையும் உருவாக்கியிருந்தன. எம்மனங்களில் நிறைவாய் நிலையாய் நிறைந்துள்ள ஆசிரியர் மறைந்தும் மறையாத மாணிக் கமாகத் திகழ்கின்றார்.

ஓம் சாந்தி!

**திரு. சு. தியாகலிங்கம்**
**ஓய்வு நிலை அதிபர்**

---

ஆரம்பக்கல்வி ஆசானாக நியமனம் பெற்றுக் குழந்தைச் செல்வங்களுடன் குழந்தையாகவே வாழ்வை அர்ப்பணித்த ஓர் உத்தமன். அண்டி வருவோருக்கு அரும்பசி தீர்த்து பொருள் உதவி நல்கி இன்பம் கண்டவர் நம் அனைவரதும் எண்ணத்தில் அமரர் ஓர் அறிவுக்கடல் மனித நேயம் கொண்ட உத்தமர். சிறந்த ஆளுமை கொண்ட ஆசான். ஏழைகளுக்கு என்றும் உதவும் பரோபகாரி. தனது குடும்பத்தவர்களுக்கும் தான் கற்ற பாடசாலைக்கும், கல்விச் சமூகத்திற்கும் நல்லவனாகவும், வழிகாட்டியாகவும் விளங்கி அமரத்துவம் அடைந்தாலும் அன்புவை எம் நெஞ்சின் அருளாக் காண்கின்றேன்.

**திரு.பொ.அற்புதரூபன்,**
பிரதம ஓய்வுநிலை முகாமைத்துவ உத்தியோகத்தர் பரீட்சைகள் திணைக்களம்

---

அன்பொளி கல்வியகம் தன்னில் தனித்துவம் மிக்க நிறுவனராய் பல்லாயிரம் மாணவர்களை புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற வைத்த பேராசான் உதவி ஆசிரியர்களாய் உங்களோடு இணைந்து பணிபுரிந்த பொன்னான நாட்களில் உங்கள் அன்பு, நேர்மை, இரக்கம், மகிழ்ச்சி, தலைமைத்துவம் கண்டு எங்கள் சிந்தனைகள் விரிந்தன. புன்சிரிப்புக் காட்சி புலனடங்க வைத்திடுமே இடி விழுந்த செய்தியடா இதயம் நொருங்கிட்டு. நினைவலைகள் அகலாது. ஓம் சாந்தி!

**அன்பொளி ஆசிரியர்கள்.**

---

கற்பித்தல் முறைகளில் விந்தைகள் பல புகுத்திச் சித்துக்கள் பல செய்து வெளி உலகம் தன்னை உற்று நோக்கிப் பார்க்க வைத்து பிறந்த மண்ணிற்குப் பெருமை சேர்த்தவர் ஆசிரியர். எல்லோரும் பின்பற்ற வேண்டிய உதாரண புருஷர். மாணவச் செல்வங்களின் மனங்களைப் புரிந்து கற்பிக்கின்ற உளவியல் நிபுணர் உண்மை, தூய்மை சுயநலமின்மை இவை மூன்றும் எவனொருவனிடத்தில் இருக்கின்றதோ அவனை அழிக்கக்கூடிய சக்தி இப்பிரபஞ்சத்திற்கே இல்லை என்பார்கள். இம்மூன்றும் ஒருங்கே அமையப்பெற்ற ஆசான் என்றுமே எம்மோடு இருப்பார்.

**Dr. R. Manivasakan**
**BSc, MBBS, DTCD, M.Sc, M.BA.**

---

அன்பு ஆருயிரே காற்றோடு கலந்து விண்ணுலகம்
விரைந்த தேனோ. சடுதியாய் உமைப்பிரிந்ததனால்
துடிக்கின்றேன். என் தவிப்பு உங்களுக்குக் கேட்கின்றதா
என் ஆத்மா அமைதியுற உங்கள் அன்பைத் தவிர
யாருளர் இவ்வுலகில்.
எம் அப்பாவை அழைத்துவா என்றே - உங்கள் மைந்தர்கள்
துடித்து வாட்டுகின்றனர். யாரிடம் போய்க்கேட்பேன்
எங்கு தேடுவேன் என் ஆருயிரே அன்பே
புலமைக்கல்வியின் புதுமையெல்லாம்
தேசம் போற்றிடப் புகட்டி நின்றவரே.
வாடியவரெல்லாம் வாழ்வினில் உயர்ந்திட
அயராது உழைத்திட்ட அன்பே
எமையேன் தவிக்கவிட்டு விண்ணுலகம் சென்றனை
வாழ்வதனில் எப்போது மீண்டும் உறவாகி
மகிழ்ந்திடுவோம் என்றெண்ணித் தவித்திடும் எந்தனுக்கு
தோன்றாத் துணையாய் உடனிருந்து
அருள்புரிவாய் என் பிரியமுள்ள நாயகனே - அன்பே

**என்றும் உங்கள் நினைவலைகளுடன்**
**மனைவி**

---

பரிவோடும் கனிவோடும் - அப்பா கட்டி நாம்
கதறியழ, கண்ணீர்க்குளமாக - வழிமீது
விழிவைத்துக் காத்திருந்தோம் - அப்பா
பெட்டியில் ஏறியே கத்தினோம் - அப்பா
விழித்திடு என்றே நீங்கள் எழவே இல்லை
ஏமாற்றி விட்டீர்கள் - அப்பா
என்றும் உம்மையே பூசிக்கின்றோம்
துணையாய் வந்திடு - அப்பா

**பிள்ளைகள்**

---

சோதர்கள் சோதரிகள் மைத்துனர்கள் மைத்துனிகள்
மாமனார் மாமியுடன் மற்றுள்ள உறவுகளும்
தேம்பியழுதரற்ற தென்புலத்தே பயணித்தீர்
உம்மொழியின் உரைகேட்டு ஓராண்டு போனாலும்
மெய்மறக்க முடிந்திடுமோ மெழுகான உம் வாழ்வு.

**குடும்பத்தினர்**

---

மலர்ந்து விடும் என்று நினைக்கையில்
உதிர்ந்து விட்டதும் வாழ்வு
ஏற்க மறுக்கின்றது - கனத்த மனத்துடன்
இருக்கும் வரை நினைத்திருப்போம்.

**ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!**

(CS18969)(3/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதியுடன் பேசுவதற்கு கூட்டமைப்பு போகக்கூடாது

## காணாமல் ஆக்கப்பட்டோர் உறவுகள் சங்கத் தலைவி கோரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 22

ஜனாதிபதியுடனான சந்திப்பை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் புறக்கணிக்க வேண்டும் என்று காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கத் தலைவி யோகராசா கனகரஞ்சினி தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

ஜனாதிபதிக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையிலான சந்திப்பு எதிர்வரும் 25ஆம் திகதி இடம்பெறவுள்ளது. இந்தச் சந்திப்பில் பங்கேற்கப்போவதில்லை என்று கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றான ரெலோ அறிவித்துள்ளது. இவ்வாறானதொரு நிலையில் நேற்றைய ஊடக சந்திப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:-

தமிழ் அரசியல்வாதிகள் ஓர் அணியில் திரண்டு எமக்காக பேச வேண்டும்.

ஜனாதிபதியை சந்திக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக நாங்கள் அறிகிறோம். அதனை அவர்கள் புறக்கணிக்க வேண்டும் என்று கோருகிறோம்.

அரசு ஆட்டம் கண்டுள்ள இந்த நிலையில் அவர்களுடன் பேச்சு நடத்துவதை விட இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி எமக்கான உரிமைகளையும், எமக்கான நீதியையும் பெற அவர்கள் அணிதிரள வேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன், நாடாளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் ஆகியோர் ஜனாதிபதியுடனான பேச்சை புறக்கணிக்க வேண்டும்.

ஜனாதிபதியுடன் பேச்சுக்கு செல்வார்களாயின் அது எமக்கு இழைக்கப்படும் அநீதி மாத்திரமல்ல, துரோகமும் கூட' - என்றார்.

(அ-ஒ-26)

### மருதடியானுக்கு...

யாழ்ப்பாணம், மார்ச் 22

வரலாற்றுச் சிறப்புமிக்க மானிப்பாய் மருதடி பிள்ளையார் ஆலய மஹோற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. மு.ப. 10.30 மணிக்கு வசந்த மண்டப பூசை இடம்பெற்று, மதியம் 12 மணிக்கு கொடியேற்றம் இடம்பெறும். (ஒ-50)

### போதை...

யாழ்ப்பாண நகரப் பகுதியில் தடை செய்யப்பட்ட போதை மாத்திரைகளுடன் மானிப்பாய் பகுதியைச் சேர்ந்த ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவரிடமிருந்து 3 ஆயிரம் சட்டவிரோத போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டுள்ளன. (அ-ஒ-20-26)

### ரூபாவின்...

அமெரிக்க டொலர் நேற்று 280 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

டொலருக்கு நிகரான ரூபாவின் பெறுமதியை மத்திய வங்கி மிதக்க விட்ட பின்னர், தொடர்ச்சியாக ரூபாவின் பெறுமதி சரிந்து வருகின்றது. அதனால் பொருள்களின் விலை நாள்தோறும் அதிகரித்துச் செல்கின்றமையும் குறிப்பிடத்தக்கது.

(அ-ஒ-இ)

### விகாரை...

இளவாலை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மாதகல் - சம்பில்துறைப் பகுதியில் அமைந்துள்ள சங்கமித்தா விகாரை உண்டியல் உடைக்கப்பட்டு அதிலிருந்த பணம் திருடப்பட்டதாக கடற்படை அதிகாரிகளால் இளவாலை பொலிஸ் நிலையத்தில் நேற்று முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது. (அ-ஒ-125)

### வரிசைகளில்...

பாதிக்கப்பட்ட விவசாயிகளிடமும் மன்னிப்புக் கோருவதாக இராஜாங்க அமைச்சர் ரொஷான் ரணசிங்க தெரிவித்துள்ளார். பொலநறுவையில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்துரைத்த போதே மேற்கண்டவாறு கூறினார்.

'நாட்டில் தற்போது பல பிரச்சினைகள் உள்ளன. தற்போது மக்கள் அரசைத் தூற்றுகின்றனர். இதுவே உண்மை. அதனை மறைத்து எந்தப் பயனும் இல்லை. ஜனாதிபதி, பிரதமர் மற்றும் நிதியமைச்சரிடம் சென்று எமக்கும் சகல விடயங்களும் சரியாக இடம்பெறுகின்றன எனவும் சிறப்பாக இடம்பெறுகின்றன எனவும் கூற முடியும். ஆனால், எத்தனை நாள்களுக்கு இவ்வாறு ஆம் என்று தலையாட்டிக் கொண்டிருக்க முடியும். நுகர்வோர், விவசாயிகள், கடற்றொழிலாளர் மற்றும் அரச பணியாளர்கள் உள்ளிட்ட சகலரும் பிரச்சினையை எதிர்நோக்கியுள்ளனர். அமுத்தங்களைப் பிரயோகித்து மக்களை வழிநடத்த முடியாது. மக்களின் பிரச்சினைகளுக்கும் செவிசாய்த்து செயற்பட வேண்டும்' - என்றார். (அ-ஒ-இ)

### 8 வயதுச்...

பிரயோகம் செய்த 14 வயதுச் சிறுவனை அச்சுவேலியிலுள்ள சான்று பெற்ற அரச நன்னடத்தைப் பாடசாலையில் தடுத்து வைக்க யாழ்ப்பாணம் சிறுவர் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட சிறுமியின் தாயார் கொடுத்த முறைப்பாட்டின் அடிப்படையிலேயே சிறுவன் கைது செய்யப்பட்டான் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-23)

### மக்களின்...

யில் காத்திருந்த மக்கள் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர். அத்துடன் அவரது வாகனத்தின் மீது எரிவாயு சிலிண்டரால் தாக்குதலும் நடத்தப்பட்டுள்ளது.

கேகாலை - ரன்வல புதிய வீதி சந்திக்கு அருகில் நேற்றுக் காலை இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கேகாலை மாவட்டத்துக்கான லிட்ரோ எரிவாயு நிறுவனத்தின் பிரதான விநியோக முகவரான, இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத் கேகாலை ரன்வல சந்தியின் ஊடாக பயணித்தபோது, எரிவாயுவுக்காக வரிசையில் காத்திருந்த மக்கள் எதிர்ப்பு வெளியிட்டுள்ளனர்.

அவர் தொடர்ந்தும் வாகனத்தை செலுத்த முற்பட்டதாகவும், அதன்போது வரிசையில் காத்திருந்த நபர் கையில் இருந்த எரிவாயு சிலிண்டரால் அவரது வாகனத்தின் மீது தாக்குதல் நடத்தியுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

மேற்படி சம்பவத்தின் பின்னர் வீதியை மறித்து பொதுமக்கள் ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டதாகக் கூறப்படுகிறது. இதேவேளை - சிறிது நேரத்தில் அவ்வீதியின் ஊடாக பயணித்த கேகாலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் உதயகாந்த குணதிலக, சம்பவம் தொடர்பில் அறிந்ததையடுத்து மாற்று வழியில் பயணித்தார் என்று தெரியவந்துள்ளது. (அ-ஒ-இ)

### இந்தியக்...

முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு நாட்டை வந்தடைந்த கப்பலில் 35 ஆயிரம் மெற்றிக் தொன் டீசல் காணப்படுவதாக பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

இந்தக் கப்பலில் உள்ள எரிபொருள் கொலன்னாவ களஞ்சியசாலையில் தரையிறக்கப்படுவதாக பெற்றோலிய கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது. இதனை விரைவில் எரிபொருள் நிரப்பும் நிலையங்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வலுசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது. (அ-ஒ-இ)

### பொருளாதார...

குழுவின் உறுப்பினர்கள் முதற்றடவையாக நேற்று முற்பகல் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவையும் தேசியு பொருளாதார சபையின் உறுப்பினர்களையும் சந்தித்து பரிந்துரைகளை முன்வைத்தனர்.

சர்வதேச நிதி உதவிகளை முன்மொழிவதற்காக மத்திய வங்கி மற்றும் திறைசேரியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அதிகாரிகளைக் கொண்ட தொழில்நுட்பக் குழுவொன்றை உடனடியாக நியமித்தல்,

நிதி ஆலோசகர் ஒருவரை உடனடியாக நியமித்தல் மற்றும் சட்ட ஆலோசகர் ஒருவரை நியமிக்க நடவடிக்கை எடுத்தல்,

சர்வதேச நிதி உதவிகளை முன்மொழிவதற்காக மறுசீரமைப்பு வேலைத்திட்டத்தை தொழில்நுட்பக் குழு விரைவாக முன்வைக்கவேண்டும்,

நிதி அமைச்சருக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்காக, நிபுணர் குழு ஒன்றை அடையாளம் காணல்,

விநியோக தடைகளைத் தவிர்ப்பதன் மூலம் நம்பிக்கையை வளர்ப்பதில் கவனம் செலுத்துதல் - என்பனவே அவர்கள் முன்வைத்துள்ள பரிந்துரைகளாகும்.

பொருளாதாரத்தை உறுதிப்படுத்தி, சரியான திசையில் வழிநடத்துவதற்கு மறுநிதியளிப்பை வலுப்படுத்த குறுகிய மற்றும் நீண்டகால நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்று ஆலோசனைக் குழு மேலும் பரிந்துரை செய்தது.

உலகெங்கிலும் உள்ள பல நாடுகளின் பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள பாதிப்பின் விளைவுகளை இந்நாடும் எதிர்கொள்ள வேண்டியிருக்கின்றது. பரிமாற்ற நெருக்கடி இதில் மிக முக்கியமானது. எதிர்கொள்ளும் சவால்களை சரியாக நிர்வகிப்பதன்மூலம், ஏற்பட்டுள்ள பொருளாதார வீழ்ச்சியை குறுகிய காலத்தில் தவிர்க்க முடியும் என ஆலோசனைக் குழு நம்பிக்கை தெரிவித்துள்ளது. (அ-ஒ-இ)

### அமெரிக்க...

விவகாரங்களுக்கான உதவிச் செயலாளர் டொனால்ட் லூ மற்றும் இந்தோ - பசுபிக் பாதுகாப்பு விவகாரங்களுக்கான கொள்கைத் துணைப் பாதுகாப்புச் செயலாளர் அமண்டா டோரி ஆகியோர் இலங்கைக்கு இன்று வருகை தரவுள்ளனர்.

இந்தப் பயணத்தின்போது ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச, வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் மற்றும் வெளிவிவகாரச் செயலர் ஜயநாத் கொலம்பகே ஆகியோரை சந்திக்கவுள்ளனர்.

நாளை புதன்கிழமை வெளிவிவகார அமைச்சில் நடைபெறவுள்ள இலங்கை - அமெரிக்கக் கூட்டாண்மை உரையாடலின் 4ஆவது அமர்வுக்கு அமைச்சர் பீரிஸ் மற்றும் துணைச் செயலர் நுலாண்ட் ஆகியோர் இணைத்தலைமை வகிக்கவுள்ளனர். அத்துடன், துணைச் செயலர் நூலன்ட் கொழும்புத் துறைமுகத்துக்குப் பயணம் மேற்கொண்டு, வர்த்தக மற்றும் சிவில் சமூகத்தினரை சந்திக்கவுள்ளார். (அ-ஒ-5)

### 2.5 பில்லியன்...

தவியைக் கோரியுள்ளது. இந்தக் கடனுதவியை வழங்குவது தொடர்பில் இன்னமும் தீர்மானிக்கவில்லை என்று இலங்கைக்கான சீனத் தூதுவர் தெரிவித்தார். கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர்கள் சந்திப்பிலேயே அவர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

சீனாவிடம் ஒரு பில்லியன் அமெரிக்க டொலரைக் கடனாகவும், 1.5 பில்லியன் அமெரிக்க டொலரை பேச்சின் அடிப்படையில் பொருள்களைக் கொள்வனவு செய்யும் கடன் தொகையாகவும் கோரியுள்ளது.

இதேவேளை - சீனாவுக்கு ஏற்கனவே செலுத்த வேண்டிய கடன் தொகை இந்த மாதம் செலுத்தப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-இ)

**(தொடர்புடைய செய்தி உள்ளே)**

### சர்வகட்சி...

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கும், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையில் நடைபெற்ற சந்திப்பின்போது எட்டப்பட்ட இணக்கப்பாட்டின் அடிப்படையில் சர்வகட்சி மாநாட்டை நாளை முற்பகல் 10 மணிக்கு ஜனாதிபதி செயலகத்தில் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டது.

நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும், அங்கீகரிக்கப்பட்ட 27 அரசியல் கட்சிகளுக்கும் ஜனாதிபதி தரப்பில் இருந்து அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. எனினும், குறித்த மாநாட்டில் பங்கேற்காதிருக்க முக்கியமான கட்சிகள் முடிவெடுத்துள்ளன.

பிரதான எதிரணியான ஐக்கிய மக்கள் சக்தி, தேசிய மக்கள் சக்தி, ஜனநாயக மக்கள் முன்னணி, மலையக மக்கள் முன்னணி, தொழிலாளர் தேசிய சங்கம், ரெலோ, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், தேசிய சுதந்திர முன்னணி, பிவிதுரு ஹெல உறுமய, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஆகிய கட்சிகள் புறக்கணிக்கும் தீர்மானத்தை எடுத்துள்ளன.

அத்துடன், ஜனநாயக இடதுசாரி முன்னணி, இலங்கை கம்யூனிஸ் கட்சி, முஸ்லிம் தேசியக் கூட்டணி, தேசிய காங்கிரஸ் ஆகியனவும் மாநாட்டை புறக்கணிக்கும் முடிவை எடுக்கக்கூடும் என்று அறிய முடிகின்றது.

அதேவேளை, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன, சுதந்திரக்கட்சி, லங்கா சமாமஜக்கட்சி, எமது மக்கள் சக்தி கட்சி, ஈ.பி.டி.பி., தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சி, மக்கள் ஐக்கிய முன்னணி, தமிழ் அரசுக்கட்சி, புளொட், ஐக்கிய தேசியக் கட்சி ஆகியன மாநாட்டில் பங்கேற்கவுள்ளன.

இதனால் சர்வகட்சி மாநாடு எதிர்பார்த்த நோக்கத்தை எட்ட வாய்ப்பில்லை எனவும், மாநாடு பிசுபிசுத்துப் போவதற்கே வாய்ப்புக்கள் அதிகம் எனவும் கொழும்பு அரசியல் வட்டாரங்கள் குறிப்பிடுகின்றன. (அ-ஒ-5-44)

**(தொடர்புடைய செய்தி உள்ளே)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆட்சியாளர்களுக்கும் அர்ப்பணிப்பு தேவை

## கோத்தாபய தரப்புக்கு சஜித் பதிலடி



**கொழும்பு, மார்ச் 22**

**ஆட்சியாளர்களே அர்ப்பணிப்பின் மூலம் முன்னுதாரணத்தை வழங்கவேண்டும். மாறாக மக்களிடம் அர்ப்பணிப்பை எந்தத் தருணத்திலும் வேண்டி நிற்கக்கூடாது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:- நாடென்ற ரீதியில் மிக மோசமான இக்கட்டான சூழ்நிலைக்கு நாம் தள்ளப்பட்டுள்ளோம். தற்போதைய அரசின் கையாலாகாத்தனம், ஆணவம், நயவஞ்சகத்தனத்தால் இன்று நாடு அழிவுறும் நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளது. நாட்டின் டொலர் கையிருப்பு வீழ்ச்சியடைந்துள்ளது. ஒரு மோசமான தீய சுழற்சி வளையம் உருவாகியுள்ளது. வரிச்சலுகையால் வரி வருவாய் குறைந்துள்ளது. எம்மால் சர்வதேச மூலதன சந்தைக்குச் சென்று டொலரைக் குறைந்த வட்டிக்கு கடன் வாங்க முடியாது. எரிபொருள் கொள்வனவு செய்ய டொலர் கையிருப்பில்லை. எரிபொருள் இல்லாத போது மின் துண்டிக்கப்பட்டு தொழிற்சாலைகளின் செயற்பாடுகள் குறைவடைகின்றன. இதனால் நாட்டில் ஏற்றுமதிப் பொருள்களின் உற்பத்தி குறைவடைகிறது. ஏற்றுமதிச் சந்தையில் காணப்படும் கேள்விக்கு உற்பத்திப் பொருள்களை உரிய நேரத்தில் வழங்க முடியாத சந்தர்ப்பம் உருவாகும். அதனால் ஏற்றுமதிச் சந்தைகளை நாம் இழக்க நேரிடும். ஏற்றுமதி வீழ்ச்சி அடையும்போது டொலர் பற்றாக்குறை ஏற்படும். அர்ப்பணிப்பு, தியாகம் என்பது ஆட்சியாளரிடமிருந்து ஆரம்பிக்கப்பட வேண்டும். ஆட்சியாளர்கள் முன்மாதிரியான மனிதர்களாக மாற வேண்டும். இவற்றையெல்லாம் செயற்படுத்தவேண்டும். அதை விடுத்து அர்ப்பணியுங்கள் அர்ப்பணியுங்கள் என்று திரும்பத்திரும்ப மக்களைக் கேட்டுக்கொண்டிருக்கக் கூடாது - என்றார். (வ-இ)

# சிங்களமொழியில் சான்றிதழ்கள்

கொழும்பு, மார்ச் 22

அரச ஆயுள்வேத மருத்துவசபை சித்த மருத்துவர்களுக்கான மீள்பதிவுச் சான்றிதழ் சிங்கள மொழியில் வழங்கப்படுகிறது என முன்னாள் பிரதேச ஆயுள்வேத பாதுகாப்புச்சபை உப தலைவர் தெரிவித்துள்ளார். அரச ஆயுள்வேத மருத்துவசபை சித்த மருத்துவர்களுக்கு ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை அரச பதிவைப் புதுப்பித்து சான்றிதழ் வழங்கப்படுவது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த மீள்பதிவுக்கான விண்ணப்பப்படிவங்களில் தமிழ் மொழியிலா அல்லது சிங்கள மொழியிலா சான்றிதழ்கள் வழங்கப்படவேண்டும் என விருப்புரிமை கோரப்பட்டிருந்தது. இந்த நிலையில் தமிழில் மீள்பதிவுச் சான்றிதழ் வேண்டும் என வேண்டுகை செய்தவர்களுக்கும் சிங்கள மொழியில் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச)

# லிட்ரோ எரிவாயு விலை அதிகரிக்கப்படவில்லை

கொழும்பு, மார்ச் 22

லிட்ரோ எரிவாயுவின் விலையை அதிகரிப்பது தொடர்பில் இதுவரை எந்த முடிவும் எடுக்கவில்லை என்று லிட்ரோ கேஸ் லங்கா லிமிடெட் நிறுவனத்தின் தலைவரான தெஷார ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

நாட்டின் பல பாகங்களிலும் உள்ள சில விநியோகஸ்தர்கள் நேற்றுமுன்தினம் இரவு முதல் லிட்ரோ எரிவாயுவின் விலையை தாறுமாறாக உயர்த்தியுள்ளனர். ஆனால் லிட்ரோ எரிவாயு விலை அதிகரிக்கப்படவில்லை.

லாப்ஸ் எரிவாயு விலையை அதிகரிக்கப்பட்டதைத் தொடர்ந்து, லிட்ரோவின் சில விநியோகஸ்தர்கள் 12.5 கிலோ எடையுள்ள எரிவாயு சிலிண்டரை 4 ஆயிரத்து 200 ரூபாவுக்கு விற்பனை செய்கின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-4,இ)



# சாரணர்தினக்கொடி பிரதமருக்கு அணிவிப்பு

இலங்கை சாரணர் இயக்கத்தின் 105ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு ஆரம்பிக்கப்பட்ட கொடி தினத்தின் முதலாவது கொடி பிரதமர் மஹிந்த ராஜபக்சவுக்கு, இலங்கை சாரணர் இயக்கத்தின் உதவித் தலைமை ஆணையாளர் நிர்மலி வில்லிய மால் நேற்று அணிவிக்கப்பட்டது. தொடர்ந்து சாரணர் இயக்கத்தின் வரலாற்று நூல், இலங்கைச் சாரணர் இயக்கத்தின் தொடர்பாடல் ஆணையாளர் ருக்ஷானி அஸீஸால் பிரதமருக்கு வழங்கப்பட்டது. நிகழ்வில் பிரதமரின் செயலாளர் அனுர திஸாநாயக்க, சர்வதேச சாரணர் இயக்கத்தின் ஆணையாளர் நதீகா குணசேகர மற்றும் பல்வேறு வயது பிரிவுகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சாரணர்கள் கலந்துகொண்டனர். (ம-4,இ)

# நிறுவுநர்தின விழாவும் தமிழிசை சங்கமமும்

கொழும்பு, மார்ச் 22

கொழும்புத் தமிழ்ச் சங்கம் அமுத விழா ஆண்டில் நடத்தும் நிறுவுநர் தின விழாவும் தமிழிசை சங்கமமும் எதிர்வரும் 26ஆம் திகதி சனிக்கிழமை மாலை 5 மணிக்கு கொழும்புத் தமிழ்ச்சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதன்போது, 'தமிழ்ச் சங்கம் கடந்து வந்த பாதை' எனும் தலைப்பில் சிறப்புரையை கொழும்புத் தமிழ்ச் சங்க துணைத்தலைவர் மா.கணபதிப்பிள்ளை, தமிழிசையை வைசாலி யோகராஜா, வயலின் ச.திபாகரன், மிருதங்கம் வி.வேனிலான் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

கொழும்புத் தமிழ்ச் சங்கத் தலைவர் சட்டத்தரணி நடராஜர் காண்டீபன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண உள்ளூராட்சி அலுவலக செயலாளர் இலட்சுமணன் இளங்கோவன் கலந்துகொள்வார். (ம-14)

# அம்மையார் குருபூசையும் சிறப்புச் சொற்பொழிவும்

யாழ். மாவட்ட இந்து சமய அறநெறிப் பாடசாலைகளில் 'வாராந்தச் சொற்பொழிவும் மாதந்தோறும் நாயன்மார் குருபூசை நிகழ்வும் என்ற தொடரில் 'காரைக்கால் அம்மையார்' குருபூசையும் சிறப்புச் சொற்பொழிவும் எதிர்வரும் 25ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு காரைக்கால் விசாலாட்சி சமேத விஸ்வநாதர் ஆலய காரைக்கால் சிவன் மணிமண்டபத்தில் இடம்பெறவுள்ளது. குருபூசையைத் தொடர்ந்து 'தலையால் நடந்த அம்மை' எனும் கருப்பொருளில் சைவப்புலவர் கந்த சத்தியதாசன் சிறப்புச்சொற்பொழிவை ஆற்றவுள்ளார். குருபூசையை முன்னிட்டு நடத்தப்பட்ட இந்துசமய பொது அறிவுப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்குப் பாராட்டிப் பரிசில்களும் வழங்கப்படவுள்ளன. இந்து கலாசார உத்தியோகத்தர் கிரியா பத்மராஜ் தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக சைவ சித்தாந்த முதுகலைமாணி கலாநிதி விக்னேஸ்வரி பவநேசன் கலந்துகொள்வார். (ம-14)

**விற்பனைக்கு**

மோட்டார் சைக்கிள் உதிரிப்பாகங்களுடன் கடை விற்பனைக்கு உண்டு. (கட்டடம் தவிர்ந்த ஏனைய பொருட்கள் மட்டும்) (CS 18975) (4/6) 074 128 4648

**மணமகள் தேவை**

1989 அவிட்டம் 2ஆம் பாதம், கும்பராசி, 35 பாவம். யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த தனியார் தொழிலதிபர் மணமகனுக்கு பொருத்தமான, குடும்பப் பாங்கான, படித்த மணமகளை எதிர்பார்க்கின்றோம். (CS 18972) (4/6)

077 348 4837

**காணி விற்பனைக்கு உண்டு**

யாழ். கைதடி தெற்கில் விக்னேஸ்வரா வித்தியாலயம் அருகாமையில் 02 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
❖ கைதடி சந்தியில் இருந்து 600m தூரத்தில்
❖ நல்ல சூழலில்
❖ கைதடி சந்தி (A 09 றோட்) பெற்றோல் நிரப்பு நிலையம் அருகாமை வீதியில்

தொடர்பு : 074 291 3725 /074 291 3726

**காணி விற்பனைக்கு உண்டு**

யாழ். மானிப்பாயில் பிரதான வீதியில் (யாழ். காரைநகர் வீதி) அரசடி பிள்ளையார் கோயில் முன்பாக 02 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
❖ மானிப்பாய் சந்தையில் இருந்து 1km தூரத்தில்
❖ 14 அடி பாதையுடன்
❖ பிரதான வீதியில் இருந்து 200m தூரத்தில்
ஒரு பரப்பின் விலை 5 இலட்சம் ரூபாய்

தொடர்பு : 074 291 3727

**காணி விற்பனைக்கு உண்டு**

யாழ்ப்பாணம் நாவற்குழியில் 06 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் (நிலப்பரப்பு)
A9 வீதியில் இருந்து 150M தூரம், லங்காஅசோக் லேடன் வாகனவிற்பனை நிலையத்திற்கு அருகாமையில்.
நாவற்குழி சந்தியிலிருந்து 500m தூரம்,
யாழ். பஸ் நிலையத்திலிருந்து 8km தூரம்
18 அடிப்பாதையுடன் இயற்கை சூழல். நன்னீர்ச்சூழல்

தொடர்பு : 077 6234 204

**காணவில்லை**



யாழ். திருநெல்வேலி பகுதியில் பிறவுன் நிற நாய் கழுத்தில் கறுப்பு நிற பட்டி அணிந்தபடி கடந்த (19.03.2022) சனிக்கிழமை இரவு முதல் காணவில்லை. தகவல் தருபவர்களுக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:
கிரி- 077 34 59 599

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 22.03.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.